

# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# அமுத மொழிகள்



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# அமுத மொழிகள்

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை – 600 009.

சிறப்பு வெளியீடு எண். 38

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2014

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.

# பதிப்புரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தையிலும் எழுத்திலும் பேச்சிலும் ஒளிர்ந்த கருத்துமணிகளைத் தொகுத்து **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழிகள்"** எனும் தலைப்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் இந்த அழகிய சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மொழி, கல்வி, இலக்கியம், ஆன்மீகம், பொருளாதாரம், மகளிர் மேம்பாடு, அரசியல் போன்றவை குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சிந்தனைப் பூங்காவில் மலர்ந்த வாசமிகு மலர்கள், இந்நூலை வாசிக்கும் வாசகர்களின் நெஞ்சங்களிலெல்லாம் நறுமணம் பரப்பும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கருத்துச் செல்வங்களை, அவர்கள் ஆற்றிய பல்வேறு உரைகளிலிருந்து எடுத்து, சீரிய முறையில் தொகுத்து, **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழிகள்"** என்ற தலைப்பில் நூலாக வழங்கியுள்ள செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப** அவர்களையும் இப்பணிக்கு உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் பாராட்டுகிறேன்.

நவில்தொறும் நயம் படைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்துச் செல்வங்களைத் தமிழக மக்கள் கருத்தூன்றிப் படித்துப் பயன்பெற்றிட அன்புடன் விழைகின்றேன்.

**மூ. இராசாராம்,** இ.ஆ.ப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# அமுத மொழிகள்

## எனது இலட்சியம்

❖ ஒரு காலகட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும் எந்த உதவியும் இலவசமாகத் தர வேண்டிய ஒரு அவசியம் இருக்கக்கூடாது. தமிழக மக்கள் யாரிடத்திலேயும் கையை நீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக்கூடாது. அந்த நிலையை எனது வாழ்நாளில் நான் காணவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. அதுதான் என்னுடைய இலட்சியம்.

## தமிழகம் எதிலும் முதலிடம்

❖ இந்தியாவிலேயே, முதலீட்டாளர்கள் நாடுகின்ற, முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம்.

## வாழ்க்கை முன்னேற்றம்

❖ அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி

மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்.

## மக்களின் வெகுமதி

❖ தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழக மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு.

## புனிதக் கடமை

❖ என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை.

## உயர்ந்த இலட்சியம்

❖ நமது இலட்சியம் உயர்வானது! நமது பார்வை தெளிவானது! நமது வெற்றி முடிவானது!

## அரசின் குறிக்கோள்

❖ தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும்தான், இந்த அரசினுடைய குறிக்கோள்.

## முன்னுரிமை

❖ தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். அதே நேரத்தில், மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் மக்கள் அனைவரும் பயன் பெறும் வகையில் அதாவது inclusive growth அமையும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு மேற்கொள்ளும்.

## மக்கள் நலன்

❖ தமிழக அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத்தீட்டி மக்கள்வாழ்வுவளம்பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்று கொண்ட அன்றே மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன்.

## முதன்மைத் துறைக்கு முன்னுரிமை

❖ தொழில் துறை மற்றும் சேவைத் துறை ஆகிய இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை துறைகளை வலுப்படுத்தும் அதே வேளையில், முதன்மைத் துறையான விவசாயத்திற்கும், விவசாயிகளுக்கும் எங்கள் அரசு எப்போதும் முன்னுரிமை அளிக்கும்.

## உண்மையான மக்களாட்சி

❖ மிக அதிகமானவர்களுக்கு மிக அதிக நன்மையைப் பயப்பது தான் உண்மையான மக்களாட்சி.

## நமது கடமை

❖ குழந்தைப் பருவம் குதூகலமாய், வண்ணத்துப் பூச்சிகளாய் விளையாடித் துள்ளித் திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம். குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்.

## உறுதி ஏற்போம் !

❖ நாம் அனைவரும் நம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப உறுதி ஏற்போம்! குழந்தைகள் பணிக்குச் செல்வதைக் கண்டால் அவர்களைத் தடுத்து பள்ளிக்கு அனுப்பி வைப்போம்!

## சமூக அவலம் நீக்குவோம்

❖ குழந்தைத் தொழிலாளர் முறை என்னும் சமூக அவலம் நீக்கப்பட சமுதாயத்தில் உள்ள அனைவரும் உறுதியேற்போம்! குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றிடுவோம்! குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம்!

## பெண்கள் முன்னேற்றம்

❖ ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமானால், அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும்.

## வான்மழை சேமிப்போம்

❖ வான் தந்த மழை நீரை முறையோடு சேமித்து நாம் வாழ்வதோடு, நமது சந்ததியினரும் மழை நீரின் அவசியம் பற்றி உணர்ந்து வாழ நாம் இப்போதே அதற்கு அடித்தளம் போட்டாக வேண்டும்.

## நீர்வளம் பெருக்குவோம்

❖ மழை பெய்யும் போது அந்நீர் கடலில் சென்று வீணாகக் கலப்பதைத் தடுத்து முறையாகச் சேமித்து, பூமியில் செலுத்தினால் நிலத்தடி நீர் வளம் அதிகரிக்கும். கடல் நீர் உள்ளே புகாமல் நிலத்தடி நீரின் தரமும் உயரும், குடிநீர் ஆதாரமும் பெருகும்.

## உலகு செழிக்க...

❖ நீர் வளம் பெருகினால், நில வளம் பெருகும். நில வளம் பெருகினால், உலகம் செழிக்கும்.

## அனைத்து வகையிலும் முன்னேற்றம்

❖ தமிழ்நாடு ஓர் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பெற வேண்டும். அதற்கு ஒவ்வொரு குடும்பமும், சமூக பொருளாதார வளர்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் முன்னேற வேண்டும்; வளர்ச்சி பெற வேண்டும்.

## அடித்தள மக்கள் மேல் அளவற்ற அக்கறை

❖ ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர், ஆகிய சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்குக் கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில், நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்.

## தமிழ்மொழி பேணுவோம்

❖ தொல் மொழிகளில் இன்று பேச்சு வழக்கில் இருந்து வருகின்ற ஒரே மொழி, நம் தமிழ் மொழியாகும். தமிழ் மொழியை நம் உயிரெனப் பேணிக் காத்து, எதிர்வரும் நூற்றாண்டுகளின் சவால்களை எதிர்கொள்கின்ற ஆற்றலையும் அறிவையும் அளிப்பதே, இன்றைய நமது கடமை.

## ஆன்மீகப் பயிற்சி

❖ கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழி பாட்டில் ஈடுபட்டு வருவதையும், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஆன்மீகப் பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள்.

## தனித்தன்மை மிக்க மொழி

❖ ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித் தன்மை இருப்பது உண்டு. ஆனால், நம் தமிழுக்கு இருக்கும் தனித் தன்மை வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது. தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித் தன்மையும், ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு.

## உலகம் வியக்கும் தமிழ்

❖ இளமை, இனிமை, தொன்மை, தெய்வீகத் தன்மை என்னும் அனைத்து நற்பண்புகளையும், முழுமையாகப் பெற்றுள்ள தமிழ் மொழி, ஒரு புறம் பழமைச் சிறப்புகளோடு விளங்குவதைப் போலவே, இன்னொரு புறம் இளமைத் துடிப்போடு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து உலகம் வியக்கிறது.

## அருங்கலைகளின் இருப்பிடம்

❖ தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொன்று தொட்டு திருக்கோயில்கள், அருங்கலைகளின் இருப்பிடங்களாகவும், நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும்போதிக்கின்றகல்விச்சாலைகளாகவும், விளங்கி வந்துள்ளன.

## ஆலயங்களின் அரும்பங்கு

❖ பாரம்பரியச் சிறப்புமிக்க, சீரிய தமிழ்க் கலாச்சாரமும், பண்பாடும், இங்கு ஓங்கு சீர் புகழோடு விளங்குவதற்கு ஆலயங்கள் ஆற்றிய பங்கை நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட முடியாது.

## சமுதாயத்தின் சொத்துக்கள்

❖ ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன.

## நன்னெறிப் பாதை

❖ நன்னெறிகளையும், நற்பண்புகளையும் வளர்த்து, மக்கள் மனங்களில் நியாய உணர்வுகள் மேலோங்கச் செய்கின்ற நல்வழி காட்டும் நன்னெறிப் பாதைகளாகத் திருக்கோயில்கள் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன.

## தவிர்க்க முடியாத அங்கம்

❖ திருக்கோயில்களைத் தங்கள் சமூக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கங்களாகத் தமிழகத்து மக்கள் ஆண்டாண்டு காலமாகக் கருதி வருகின்றார்கள்.

## உன்னத சமுதாயப் பணி

❖ கோயில்கள் பொது மக்களின் சொத்துக்கள் ஜாதி, சமய வேறுபாடின்றி அனைவரும் கூடுகின்ற சமுதாயக் கூடங்கள், கல்விச்சாலைகள் என்கின்ற உணர்வோடு பார்க்கும் போது ஆலயத் திருப்பணி உண்மையிலேயே ஒரு உன்னத சமுதாயப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.

## அனுபவச் சுரங்கம் தந்தை பெரியார்

❖ தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு பலரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

## உலகத் தலைவர்கள் வரிசையில் முதலிடம்

❖ பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

## பெரியாருக்கு பெண்மை தந்த சிறப்பு

❖ நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.

## ஆசிரியர் – அரசு ஊழியர் கடமை

❖ நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய கூர் நோக்கை மெய்யாக்குவதில் ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்துச் செயலாற்ற வேண்டும் என்பதே என் விருப்பம் ஆகும்.

## தமிழ்நாட்டுப் பெண்களின் சாதுரியம்

❖ ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது. அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

## பல்கலை வித்தகர் பேரறிஞர் அண்ணா

❖ அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத்துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றிகண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

## அண்ணாவின் முழக்கம்

❖ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன் என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

## வன்முறை நாடா வரலாற்று நாயகர் – அண்ணா

❖ அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது. அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது. உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர்.

## ஏழைகளின் நம்பிக்கை நாயகர் புரட்சித்தலைவர்

❖ கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும், புது நம்பிக்கையாகவும், தன் இளமைக் காலம் முதல், திரைப்படத் துறையிலும், அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித்தலைவர்.

## வாரி வழங்கிய மன்னாதி மன்னன்

❖ மக்களோடு பழகி, மக்களோடு வாழ்ந்து, மக்களுக்காக உழைத்து, மக்களுக்கு வாரி வழங்கி, மக்களுக்காகச் சிந்தித்து, ‘மக்கள் திலகமாய், ‘ மன்னாதி மன்னனாய்’, வாழ்ந்து மறைந்த அவரைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில் தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள். அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும் மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்கள்.

## எளிமை ஒளி வீசும் தலைவர் – காமராசர்

❖ பெருந்தலைவர் காமராஜர் அவருடைய எளிமை தமிழகத்தைமட்டுமல்ல,இந்தியாவைமட்டுமல்ல,உலகத்தையே வசீகரித்தது. பெருந்தலைவர் காமராஜர் உடையில் மட்டுமல்ல; உணவில், பிறருடன் பழகுவதில், மேடை பேச்சு இப்படி எல்லாவற்றிலும் அவருடைய எளிமை ஒளி வீசியது.

## என்றும் நினைவில் வாழும் பெருந்தலைவர்

❖ பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் கடந்த போதிலும் நம்முடைய நினைவிலே

அவருடைய எளிமையால்–

தன்னலமற்ற தொண்டால்–

நாட்டுப் பற்றால்–

புரிந்த தியாகத்தால்–

வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

## பெருந்தலைவரின் வாழ்க்கை சுட்டிக்காட்டும் உண்மை

❖ பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அத்தனை பண்பு நலன்களையும் கைக்கொள்ள முடியாவிட்டாலும், அவற்றில் ஒரு சிலவற்றையாவது இன்று அரசியலுக்கு வர விரும்புவோர் பின்பற்ற வேண்டும் என்பதே அவரது வாழ்க்கை நமக்குச் சுட்டிக் காட்டுகின்ற உண்மையாகும்.

## உணவுப் பாதுகாப்பு தரும் உன்னதத் திட்டம்

❖ இலவச அரிசி என்பது மக்களுக்கு உண்மையிலேயே உணவுப் பாதுகாப்பை அளிக்கக்கூடிய திட்டம்.

## துறைதோறும் முதன்மை

❖ ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற இலக்கை நான் கொண்டுள்ளேன்.

## மனித வள மேம்பாட்டின் முழு முதல் நடவடிக்கை

❖ மனித வளம் மேம்பாடு அடையச் செய்யும் நடவடிக்கைகளை எனது அரசு முனைப்போடு செயல்படுத்தும். மனித வள மேம்பாட்டில் முழு முதல் நடவடிக்கையாக பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தை 1982–லேயே கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அப்போது சத்துணவுத் திட்டத்தின் உயர் மட்டக் குழு உறுப்பினராக இருந்தவள் நான். எனவே தான், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் அவருடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து அரசின் கொள்கைகளை வகுத்து வருகிறோம்.

## அயராது பாடுபடுவோம்

❖ “நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்பு களுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத்திட்டங்கள் உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்”

## மக்களின் பக்கம் நாம்

❖ மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். அதனால்தான் என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள்.

## மழை பெற மரம் வளர்ப்போம்

❖ மழை பெய்யும் போது மழை நீர் சேகரிப்பது என்பது ஒருபுறம் இருக்க, நல்ல மழை பொழிய வேண்டும் என்றால், அதற்கு எது ஆதாரம் என்பதையும், நாம் புரிந்து கொள்ள வேண்டும். மரங்களே மழைக்கு ஆதாரம். எனவே,

“மரங்களை வளர்ப்போம்! மழையினைப் பெறுவோம்”

## மரங்களைக் காப்போம்

❖ மரங்கள், மனித குலத்துக்குச் செய்யும் நன்மைகள், அற்புதமானவை. அந்த மரம், செடி, கொடிகளைக் காப்பது, நமது மாபெரும் கடமை. எனவே, நம்மைக் காக்கும் மரங்களை நாம் காப்போம் என்று உறுதியெடுத்துக் கொள்வோம்.

## நிச்சய வெற்றி பெற...

❖ அரசு உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் அனைவருக்கும், ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தத் தொழிலை நீங்கள் செய்தாலும் அதை நீங்கள் செம்மையாகச் செய்ய வேண்டும் அப்படிச் செய்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயமாக உங்களை வந்து அடையும்.

## அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு

❖ சமூகத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிகாண முடியும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

## ஒற்றுமை காக்க உறுதி செய்வோம்

❖ நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளை விக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகளை இனியும் அனுமதிக்க முடியாது என்பதும் உறுதி செய்யப்பட வேண்டும்.

## நம்பிக்கை ஏற்படுத்துவோம்

❖ மதச்சார்பற்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கு வழி காண முடியும் என்ற ஒரு நம்பிக்கையையும் சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திட வேண்டும்.

## பன்முகம் கொண்ட தொன்மை நாகரிகம்

❖ நில இயலில், இனத்தில், கலாச்சாரத்தில், மதத்தில் பன்முகங்களைக் கொண்ட தொன்மையான நாகரிகம்தான் இந்தியா. நம் நாட்டின் பன்முகத் தன்மையைக் கருத்தில் கொள்ளும் போது உயிர்த்துடிப்பான மத நல்லிணக்கத்தின் மூலமே நம் நாட்டின் ஒற்றுமையைப் பேண முடியும்.

## “சர்வ தர்மா சம்பவா”

❖ நமது சமுதாயத்தில் உள்ள பல்வேறு சமூகங்களின் பலதரப்பட்ட கலாச்சார,மதக் கோட்பாடுகளின் கலவைதான் இந்தியாவின் மதச்சார்பின்மை. நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள பல்வேறு மதங்கள் ஒன்றாக வாழ்வதுதான் “சர்வ தர்மா சம்பவா” என்கிற தத்துவமாகும்.

## அரசியலமைப்புச் சட்டத்தின் சாராம்சம்

❖ நமது நாடு, பல மதங்கள் வேரூன்றி உள்ள நாடு என்பதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அதற்குரிய இடம் அளிக்க வேண்டும். ஒரு மதம் மற்றொரு மதத்தின் வழியில் குறுக்கிடக் கூடாது. பெரும்பான்மையின

மக்கள், பெறும் அனைத்து சலுகைகளும், உரிமைகளும், சிறுபான்மையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே நமது மதச்சார்பற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் சாராம்சம்.

## நாட்டின் இன்றைய தேவை

❖ மத வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் ஆகியவற்றைத் தவிர்த்து, பல மத, கலாச்சார, மொழி பேசுபவர்கள் ஒன்றாகச் செயல்பட்டு, பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பும் உருவாக்குவதே தற்போதைய நாட்டின் தேவை.

## சக்தியே பெண்

❖ பெண்ணைச் "சக்தி" என்று அழைக்கிறோம். அவள் சக்தியின் பிறப்பிடம் – சக்தியின் இருப்பிடம் – சக்தியின் சிறப்பிடம்!.

## கல்லாதவர்கள் இல்லாத தமிழகம்

❖ கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதே எனது கோட்பாடாகவும் எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது.

## இந்தியரின் கடமை

❖ பெற்ற சுதந்திரத்திற்குத் தன்னை முற்றிலும் தகுதியாக்கிக் கொள்ள வேண்டியது இன்றைய இந்தியர் ஒவ்வொருவரது கடமையாகும். ஏழ்மை கொண்ட மனிதர்

என்பது இந்தியாவில் இல்லையே! என்று நாம் மகிழ்ச்சிப் பண்பாட வேண்டும்! அந்த நாள் வர வேண்டும்!.

## கடமை செய்வதே சுதந்திரம்

❖ “சுதந்திரம்” என்னும் சொல்லை ‘உரிமை’ என்று அர்த்தப்படுத்திக் கொள்வதை விட, ‘கடமை’ என்று பொருள்படுத்திக் கொண்டால்தான் பெற்ற சுதந்திரத்துக்குப் பெருமை! அதைப் பெற்றுத் தந்தவர்களுக்கும் மரியாதை!

## இடையூறுகளைப் பொடியாக்குவோம்

❖ தமிழக மக்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தடையாக நிற்கும் எந்த இடையூறுகளையும் பொடிப் பொடியாக்கும் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எப்பொழுதும் உண்டு.

## சாதிப்பதே செயல்

❖ தேவையை நிறைவேற்றுவதே என் நோக்கம். அதைச் சாதிப்பதே என் செயலாகும். அந்த வழிக்கு வாருங்கள். இந்தக் கடின வேலையை எளிதாக, விரைவாகச் செய்வதற்கு தகவல் தொழில் நுட்பம் அவசியத் தேவையாகும்.

## திடமான முடிவெடுப்போம்

❖ எதிலும் ஆக்கப்பூர்வமான சிந்தனை ஒன்றே தாரக மந்திரமாக இருக்க வேண்டும். எதையும் பெரிதாக எண்ணுங்கள். எடுக்கும் முடிவில் திடமாக இருங்கள்.

## பல்லுயிர் ஓம்புதல்

❖ பல்வேறு உயிரினங்கள் சமச்சீரான நிலையில் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக வாழ்ந்து "இயற்கைச் சமன் நிலையைக்" காத்து வருகின்றன. இந்தப் பேருண்மையை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## இயற்கைச் சூழல் பேணுவோம்

❖ "உணவுச் சங்கிலி" (Food Chain) என்ற அற்புத நிகழ்வின் மூலம் தாவரங்களும், விலங்குகளும் ஒன்றையொன்று சார்ந்து மனித வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றன. எனவே, இயற்கைச் சூழலை நாளைய தலைமுறையினருக்காகப்பேணிக்காக்கவேண்டியபெரும் பொறுப்பும், கடமையும் இன்றைய தலைமுறையினருக்கு உள்ளது.

## ஊரகப் பொருளாதார மேம்பாடு

❖ ஊரகப்பகுதிகளில்வேளாண்சார்ந்தசிறுதொழில்கள் தொடங்கப்பட வேண்டும்; அதன் மூலம் ஊரகப் பகுதிகளில் உள்ள மூலப் பொருட்களின் மதிப்பு கூட்டப்பட வேண்டும்; ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

## ஊரகப் பகுதிகளை நகரங்களுக்கு இணையாக்குவோம்

❖ நகர்ப்புரங்களுக்கு இணையாக ஊரகப் பகுதிகள் வளர்ச்சி அடைய வேண்டும்; ஊரகப் பகுதி மக்கள் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பது எனது எண்ணம்.

## நல்ல அரசின் இலக்கணம்

❖ ஒளிவு மறைவற்ற, திறமை மிக்க மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பதுதான் ஒரு நல்ல அரசின் இலக்கணம் என்பது எனது எண்ணமாகும்.

## மனித வளர்ப்புப் பணி

❖ மலர்ச்செடிகளை ஓராண்டிலும், மரங்களைப் பத்தாண்டிலும் வளர்த்திடலாம். ஆனால், மனித வளர்ப்புப் பணி என்பது அப்படிக் குறுகிய காலத்தில் முடிந்து விடுகிற பணி அல்ல. என்றும், என்றென்றும் தொடரப்பட வேண்டிய பணி.

## சிந்தனையும் செயல்பாடும் மக்களை மையப்படுத்தியே!

❖ என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன.

## இணையில்லா மக்கள் சக்தி

❖ "உங்கள் அன்பும், உங்கள் பாசமும் ஒரு கோடி தடைகளை உடைத்தெறிகின்ற வல்லமையை எனக்குத் தருகின்றன. சக்தி என்பது மக்கள் சக்தி தானே? மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், சக்தி என்றாலும் அவை எல்லாம் மக்கள் சக்திக்கு அப்புறம்தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

## ஏழைகள் நிலை உயர்த்துவோம்

❖ ஏழைகள், ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது. அவர்களது நிலை உயர வேண்டும்! அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்.

## உழைப்பில் இருக்கிறது வெற்றி

❖ நம்முடைய உழைப்பால் நாம் உருவாக்கும் எந்தச் சொத்துக்கும் உரிய மதிப்பை நாம் அளிக்கத் தவறுவதே இல்லை. எனவே, நம்முடைய முன்னோருடைய சொத்து நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் நம்முடைய சொந்த உழைப்பின் பயனாக நாம் உருவாக்கும் சொத்தின் மதிப்பு நமக்கு மிக அதிகமானதாகவே தெரியும். எனவே, நமது வெற்றி, வியர்வையைச் சிந்தி உழைப்பதில்தான் இருக்கிறது.

## உண்மையான மனநிறைவு

❖ உழைப்புக்கு என்றும் உயர்வு உண்டு, பிறர் உழைப்பில் கிடைக்கும் பொருளை அனுபவிப்பதில் உள்ள

இன்பத்தை விட சொந்த உழைப்பின் உயர்வில்தான் உண்மையானமனநிறைவுகிடைக்கும்என்பதைஉணர்ந்து நம்பிக்கையோடு கடமைகளை நிறைவேற்றுங்கள். வெற்றி உங்களுக்கு!

## தன்னை நம்பு! வெற்றி உனது!

❖ தன் மீது நம்பிக்கை இல்லாத மனிதர்களுக்கு எவர் மீதும் நம்பிக்கை இருக்காது. இது தான் உளவியல் உண்மை! தன்னை நம்பும் மனிதர்கள்தான் வாழ்வில் வெற்றி பெற முடியும்.

## ஆக்கப்பூர்வ சிந்தனை வேண்டும்

❖ எப்போதுமே ஆக்கப் பூர்வமாக சிந்திக்க வேண்டும். சிந்தித்து நம்பிக்கையோடு இருந்தால் தீமையிலும் நன்மை விளையும், சோதனைகளைக் கடந்து, எத்தகைய சூழ்நிலையிலும், நாம் வெற்றி கொள்ள முடியும்.

## வெற்றி நிச்சயம்

❖ எதையும் முழுமையான ஈடுபாட்டோடு செய்தால் வெற்றி நிச்சயம். அதை, ஒரு சமூக அர்ப்பணிப்பு உணர்வோடு செய்தால் அது தான் தேச சேவை!

## பெண்கள் நினைத்தால்...

❖ பெண்கள் நினைத்தால், தங்கள் தலை எழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலை எழுத்தையும் மாற்ற

முடியும். அவர்களுக்குத் தேவை, வாய்ப்புகள்! அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே, எனது லட்சியம்!

## மனித உள்ளாற்றல்

❖ மனிதர்களின் வெற்றி தோல்விகளை அவர்களுடைய நிறம் நிர்ணயிப்பதில்லை – அவர்களின் உள்ளாற்றல் தான் தீர்மானிக்கிறது.

## புதிய உத்திகள் தேவை

❖ எந்தத் தொழிலை நீங்கள் செய்கிறீர்களோ அதற்காக உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய முறைகள் தேவை! புதிய வழிகள் தேவை! புதிய உத்திகள் தேவை! புதிய அணுகுமுறைகள் தேவை!

## உழைப்புக்கு மரியாதை

❖ உழைப்புக்கு மரியாதை தருகின்ற மனப்பான்மை நம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். சோம்பல் என்பது வீட்டுக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கும் கேடு.

## ஊக்கம் வேண்டும் உழைக்க வேண்டும்

நம் நாட்டு மக்களுக்கு என்ன குறை ? அறிவில் குறையா ? இல்லை! ஆற்றலில் குறையா ? இல்லவே இல்லை! அப்புறம் என்ன குறை ? ஊக்கம் இல்லை என்பது குறை! உழைப்பு போதாது என்பது குறை!

## பத்தாம் பசலிப் பாதையில் போக வேண்டாம்

❖ பத்தாம் பசலித்தனமான பாதைகளிலேயே சென்று கொண்டிருந்தால் நீங்கள் பின்தங்கி விடுவீர்கள்!

## நேரம் பார்க்காத உழைப்பு

❖ வளர்கின்ற நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலும் மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள். உழைப்புக்கு மரியாதை கொடுக்கிறது அந்தச் சமுதாயம்! அங்கே பணக்காரர்களும் கடுமையாக உழைக்கிறார்கள். தொழில் அதிபர்களும் நேரம் பார்க்காமல் உழைக்கிறார்கள்.

## உழைப்பு மட்டுமே உயர்வு தரும்

❖ வளர்ந்த நாடுகளின் வெற்றிக்குக் காரணம் உழைப்பு தான்! உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள், கசப்பாக இருக்கலாம்; ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை. உழைப்பு மட்டுமே நம்மை உயர்த்தும். உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைக்கிறேன் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

## இலட்சியப் பயணம்

❖ இந்தியாவிலேயே முதன் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும்! அந்த லட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம்!

## மாபெரும் வெற்றி

❖ மாபெரும் வெற்றி என்பது, ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல! அது, சிறு சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை!

## வெற்றி ஒரு தொடர் பயணம்

❖ வெற்றி என்பது, ஒரே நாளில் அடைந்து, மறு நாளில் மறந்து போகிற இலக்கு அல்ல! அது ஒரு தொடர் பயணம்!

## இருநிலை மேம்பாடு

❖ ஏழை, எளிய மக்களுக்கு ஒரு புறம் சலுகைகளை வழங்குவதும்;மறுபுறம்வாழ்க்கைக்குத்தேவையானவற்றை அவர்களே வாங்கிக் கொள்ளும் வகையில், அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் ஆகிய இரு வேறு நிலைகளில், பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டு வருகிறது.

## நன்றி மனப்பான்மை

❖ மனித உறவுகளை மேம்படுத்துவதில் நன்றி மனப்பான்மை மிகவும் முக்கியமானது.

## பொருளாதாரம் மேம்பட

❖ செவ்விய முறையில் திட்டமிடல், மின்சாரம், சாலைகள், நகர்ப்புர வசதிகள், இருமடங்கு ஆதரவுக்

கொள்கையுடனான வீட்டுவசதிகள் ஆகியவற்றின் உள்கட்டமைப்பு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை பொருளாதார மேம்பாட்டிற்கு மிக முக்கியமானவையாகும்.

## ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகள்

❖ நகரங்களைச் சுற்றிலும், தொழிலகங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவற்றைப் பரவலாக்க வேண்டுமெனில் ஊரகப்பகுதிகளில் அதற்கான உள் கட்டமைப்பு வசதி இருப்பது தேவையானதாகும்.

## தியாகச் செம்மல்கள் நிறைந்த தமிழகம்

❖ இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமென மதித்து, உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழகம். வன்முறைகளுக்கு இடம் கொடாமல், அஹிம்சை மூலமே அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வலம் வந்த இடம் என்ற பெருமையும் பெற்றது நம் தமிழகம்.

## உறுதியான நடவடிக்கை

❖ உண்மையான மக்கள் அரசு, சமூக நீதியை நிலை நாட்ட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## உண்மையான சுதந்திரம்

❖ அனைத்து தரப்பு மக்களும் சாதி, மத, இன வேறுபாடுகளைக் களைந்து, வறுமையில் வாடுவோர் வளம் பெற்று, அனைத்துத் தரப்பு மக்களும் அச்சமின்றி வாழ்வதுதான் உண்மையான சுதந்திரம்.

## சிறந்த மக்களாட்சி

❖ எல்லோரும், எல்லாமும் பெற்று, வாழ்வில் வளம் பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும். இவ்வாறான மக்களாட்சியில்தான், ஏழைகளும், வசதி படைத்தோருக்கு இணையான வசதிகளைப் பெற இயலும்.

## சிறந்த பொருளாதாரக் கோட்பாடு

❖ வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகளில் அனைத்து தரப்பு மக்களும் தன்னிறைவு பெறுவது ஒரு சிறந்த பொருளாதாரக் கோட்பாடாகும்.

## மக்களரசின் கடமை

❖ ஏழைகள் தங்கள் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டுமெனில், ஏழை, எளிய மக்களைப் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து, அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது மக்கள் அரசின் கடமை ஆகும்.

## தரமான கல்வியை உறுதி செய்வோம்

❖ அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றித் தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

## மனிதவளம் வளர்ச்சிக்கு அடித்தளம்

❖ நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனிதவளம் தான். மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும்.

## மக்கள் நல அரசின் கடமை

❖ மாற்றத்தைத் தந்திட்ட தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத்தரும்வகையில்,சீரியமுறையில்திட்டங்களைத் தீட்டி, சிறப்பான முறையில் செயல்படுத்துவதுதான், உண்மையான, மக்கள் நலன் நாடும் அரசின் கடமை ஆகும்.

## பொருளாதார வளர்ச்சியே மாநில வளர்ச்சி

❖ ஒரு மாநிலம், வளர்ச்சி பெற வேண்டும் எனில்; அந்த மாநிலத்தின் மக்கள் வளம் பெற வேண்டும் எனில்; மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும்.

## மனிதவள மேம்பாடு காண...

❖ மாணவ மாணவியருக்குச் சிறப்பான கல்வி அளிப்பதாலும்; மக்களின் உடல் நலம் பேணி பாதுகாக்கப்படுவதாலும்; மனிதவளம் மேம்பாடு அடையும். மனித வளம் மேம்பட்டால் அந்த மாநிலத்தில் வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

## அமைதிச் சூழலே வளர்ச்சிக்கு அடிப்படை

❖ ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும் எனில், அங்கு அமைதியான சூழ்நிலை நிலவ வேண்டும். மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படும் போது, அங்கே பொருளாதார வளர்ச்சிக்கு இடம் இருக்காது.

## தனி மனித முன்னேற்றத்திற்கு முக்கியக் காரணி

❖ அமைதி குன்றிய சூழ்நிலையில் தங்களைத் தற்காத்துக் கொள்வதிலேயே மக்கள் தங்களின் காலத்தையும், ஆற்றலையும் செலவிட நேர்வதால் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட இயலாது. எனவே தான், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனிதனின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியக் காரணியாக விளங்குவது அமைதியான சூழல்.

## சட்டம்

❖ தனது உரிமைகளை, உடைமைகளை வேறு எவரும் பறித்துக் கொள்வார்கள் என்ற அச்ச உணர்வின்றி; தன்னுடைய வளர்ச்சிக்குத் தேவையானவற்றை சமூகச் சூழலில் பெறுவதற்காக மனிதனால் ஏற்படுத்தப்பட்டதே சட்டம் ஆகும்.

## சட்ட திட்டங்களை மதித்து நடப்போம்

❖ ஒரு குறிப்பிட்ட சமுதாயம், தனது வளர்ச்சிக்கு அடிப்படையாக எவை எவை தேவை எனக் கருதுகின்றதோ, அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான சட்ட திட்டங்களை வகுத்துக் கொள்கிறது. அந்த சட்ட திட்டங்களை அந்த சமுதாயத்தில் உள்ள அனைவருமே மதித்து நடந்தால் அங்கே காவலருக்கோ, நீதிமன்றத்திற்கோ எந்த வித வேலையும் இல்லை.

## காவலர்களின் இரண்டு பக்கங்கள்

❖ சட்ட திட்டத்தை மதிப்பவர்களுக்கு உற்ற நண்பனாகவும்; சட்டத்தையும், மற்றவர்களின் உரிமைகளையும் மீறுபவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடிய எதிரியாகவும் காவலர் விளங்க வேண்டும். அதாவது, காவலர் என்பவர் நாணயத்தின் இரு பக்கம் போன்றவர். சட்டப்படி நடப்பவருக்கு நண்பர் எனும் பக்கம் தெரிய வேண்டும். சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரி என்ற பக்கம் தான் தெரிய வேண்டும்.

## மாநிலத்தின் மேன்மை

❖ தொழில் துறையில் மாநிலம் முன்னேற்றம் அடைய வேண்டும் எனில், அந்த மாநிலத்தில் உள்ள தொழில்முனைவோர் மட்டும் அல்லாமல், பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களும், பிற நாட்டினரும் விரும்பி வந்து தொழில் தொடங்கும் இடமாக அந்த மாநிலம் அமைய வேண்டும்.

## குறுக்கீடு இல்லா காவல் பணி

❖ காவலர்கள் சமூக விரோதிகளைக் கண்டு அஞ்சாமல் இருப்பது மட்டும் அல்லாமல், தங்கள் பணிகளில் எந்த விதமான இடையூறோ; அல்லது எவரிடமிருந்தோ, அதாவது, உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்று எவரிடமிருந்தும் எந்தக் குறுக்கீடும் இல்லாமல் தங்கள் பணிகளை நியாயமாகவும், நேர்மையாகவும் மேற்கொண்டால்தான், சட்டத்தின் மாட்சிமை காக்கப்பட்டு; பொதுமக்களுக்கான நியாயம் வழங்கப்பட்டு; சட்டத்தின் மீதும், அரசின் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை வைப்பார்கள்.

## சட்டத்தின் தேவை

❖ ஒரு நாட்டிலே, ஒரு சட்டம் இயற்றப்படுகிறது என்றால், அந்தச் சட்டம், அந்த நாட்டு மக்களுக்கு பயன்பட வேண்டும்; அல்லது, இது போன்ற சட்டம் தேவை என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், அந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## திடமான கருத்து

❖ காவல்துறை, ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் சொற்படி எல்லாம் கேட்கின்ற துறை அல்ல. ஆட்சிப்பொறுப்பில்இருக்கும்அரசியல்கட்சிக்குஏற்றவாறு கொள்கைகளோ, கோட்பாடுகளோ, நோக்கங்களோ மாறக் கூடியது அல்ல. எனவேதான், காவல் துறை என்பது ஆட்சி அதிகாரத்திலே இருப்பவர்களுக்குக் கட்டுப்பட்டத் துறை அல்ல ; அது, நீதிக்கும், நேர்மைக்கும், சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்ட துறை. காவல்துறையின் பணிகளில் குறுக்கீடு செய்ய யாருக்குமே அதிகாரம் இல்லை என்பதுதான் எனது திடமான கருத்தாகும்.

## சாலை உள்கட்டமைப்பின் முக்கியப் பங்கு

❖ மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்குச் சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும்.

## பேறு பெற்றோர் ஆசிரியப் பெருமக்கள்

❖ ஒரு பிறப்பில், தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் அவரது ஏழு பிறப்பிலும் உதவிடும்

என்று வள்ளுவப் பெருமான் போற்றிப் புகழும் கல்விச் செல்வத்தைப் போதிக்கும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆசிரியப் பெருமக்கள் ஆவார்கள்.

## ஆசிரியர் சமுதாயத்தின் அரும் கடமை

❖ நாட்டின் நம்பிக்கையாகத் திகழும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்தம் எதிர்கால வாழ்க்கையைச் செம்மைபடுத்தி, அவர்களை நல்ல குடிமக்களாக்கும் கடமை ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்ததாகும்.

## நம்பிக்கை நட்சத்திரங்கள்

❖ இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

## தீவிரவாதத்தை ஒடுக்கிட உறுதி

❖ தீவிரவாதத்தை திறமையாக ஒடுக்குவதிலும் சமுதாயத்தைப் பிரித்தாளும் போக்கு வளர்ப்பதைத் தடுப்பதிலும் நான் எப்போதும் உறுதி பூண்டுள்ளேன்.

## நல்லரசின் கடமை

❖ நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

## அறிவு சார்ந்த சமுதாயம் உருவாக்கும் திறன்

❖ மேல்நிலை வகுப்புகள் மற்றும் இளங்கலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இலவச மடிக் கணினிகள் வழங்குகின்ற திட்டமானது, கணினி அறிவை மேம்படுத்துவதற்கும் மாணவர்கள் அவர்களுடைய பொருளாதார பின்னணிக்கு சற்றும் தொடர்பில்லாமல் கணினி அறிவு பெற்று, அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குகின்ற திறன் பெற்றிருக்கின்றனர் என்பதை உறுதி செய்வதற்குமான பெருத்த முயற்சியாகும்.

## அழிவு சக்திகளைக் கட்டுப்படுத்துவதே முதல் தேவை

❖ தமிழகத்தை வளர்ச்சிப்பாதையில் விரைவுபடுத்த முதல் தேவை அழிவு சக்திகளைக் கட்டுப்படுத்துவதே ஆகும். சட்டத்தை அமலாக்கும்போது சிறு சம்பவங்களைக் கூட நாம் குறைந்து மதிப்பிட்டுவிடக் கூடாது.

அத்தகைய சிறு சம்பவங்கள் கூட வகுப்பு அல்லது சாதிப் பிரச்சினைகளை உருவாக்கலாம்.

## எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்

❖ தமிழ்நாட்டிலுள்ள எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதே எனது கனவாகும்.

## மருத்துவப்பணி

❖ அரசு மருத்துவமனைகளை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதையும் மருத்துவர்களும் ஏனைய சுகாதார பணியாளர்களும் தன்னலமற்ற சேவை புரிவதையும் உறுதிப்படுத்துவதே நமது பொதுவான நோக்கமாகும்.

## உந்துசக்தி

❖ மக்களுடைய எதிர்பார்ப்புகளே இந்த அரசின் உந்துசக்தியாக செயல்படுகிறது.

## மக்கள் சேவை

❖ மக்கள் சேவை என்பது நேர்மை, மனசாட்சிப்படி நடத்தல், கருணை ஆகிய அடிப்படையில் சிறந்த பயிற்சிக்கு பின் வழங்கும் சேவையேயாகும்.

## தமிழ்நாடு முதன்மை மாநிலம்

❖ நிருவாகம் மற்றும் மேம்பாடு தொடர்பாக அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்குவதே எப்போதும் என்னுடைய நோக்கமாகும்.

## குழந்தைகளுக்குப் போதிய கல்வி

❖ குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் வளர்ச்சியே எனது தனிப்பட்ட விருப்பமாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் போதுமான அளவு கல்வி கற்கும் வாய்ப்பு, உடல் ஆரோக்கியம், அழகான குழந்தைப் பருவம் ஆகியவற்றை அளித்தாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் மதிப்புள்ளவர்களாக மாற்றி அவர்களைச் சமுதாயத்தின் சொத்தாக்க வேண்டும்.

## பெண்கள் சிறாருக்கு ஆதரவு

❖ பெண்களும், சிறார்களும் தாக்குதலுக்கு ஆளாகக்கூடியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவும். அவர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் நாம் கவனக்குறைவாக இருக்கக் கூடாது.

## அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள்

❖ மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என்பதே என் நோக்கமாகும்.

## சமூக விரோத சிந்தனையை முறியடிக்க தொடர் கண்காணிப்பு

❖ தொடர்ச்சியான கண்காணிப்பு, சமூக விரோத சிந்தனைகளை முறியடித்துவிடும்; கவனிப்பாரற்ற நிலங்கள், குடிசைப்பகுதி உருவாவதற்கு காரணமாக இருப்பதோடு மட்டுமின்றி, வளர்ச்சித் திட்டங்களை பின்னடையச் செய்துவிடும்.

## காவல்துறை

❖ காவல்துறை என்பது மாநிலத்தினுடைய அதிகாரத்தின் கண்கூடாகத் தெரிகிற ஓர் அடையாளம் ஆகும். காவல்துறையினர் மீது பாமர மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைப்பதை உறுதி செய்வது நமது அனைவரின் ஒருமித்த முயற்சியாகும்.

## சிறந்த ஆரோக்கியம்

❖ சிறந்த ஆரோக்கியம் என்பது சமுதாயத்தின் அனைத்துக் கட்ட வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காகும். ஆரோக்கியமான மக்கள்தான் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உண்மையாகப் பங்காற்ற இயலும்.

## அறிவுசார் மூலதனம்

❖ வளர்ச்சியடைந்த உலகம் முழுவதிலும் நாம் மனித ஆற்றலிலிருந்து அறிவாற்றலுக்கு மாறியுள்ளோம். நாம் நம் உடல் தசைப் பயன்பாட்டிலிருந்து மூளையின் பயன்பாட்டிற்கு மாறியுள்ளோம். அறிவைப் பயன்படுத்தும்போது சக்தியாக மாறுகிறது. அறிவுசார் மூலதனம் என்பது உற்பத்தியின் அனைத்துக் கூறுகளிலும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும்.

## அறிவாற்றல்

❖ உலகில் ஒரு நாட்டின் இடத்தை உண்மையில் தீர்மானிப்பது படைபலமோ அல்லது பொருளாதார வலிமையோ அல்ல. அதை அறிவாற்றல்தான் தீர்மானிக்கிறது. அறிவாற்றல் ஒரு நாட்டின் தகவல் தொழில்நுட்பம் என்பது மனிதனின் அறிவாற்றலுக்குச் சமமான ஒன்று. இதுதான் இந்தியாவை முதல் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

## தகவல் தொழில்நுட்பத்தின் சிறப்பு

❖ இந்தியப் பொருளாதார வளர்ச்சி என்பது பன்முகங்களைக் கொண்டது. இந்தியாவால் முடியுமா என்ற ஐயப்பாட்டைத் தகவல் தொழில்நுட்பம் தகர்த்துள்ளது. உலகத்தரமுள்ள பொருட்களை உருவாக்குதலிலும், உலக முன்னணி நிறுவனங்களுடன் சரி சமமாக நின்று

போட்டியிட இயலும் என்ற பெயரே இன்று உலக அளவில் உள்ள முதலீட்டாளர்களின் மனதில் இந்தியா இடம் பெற்றுள்ளது.

## தகவல் தொழில்நுட்பத் தலைநகரம் – சென்னை

❖ சென்னை ஒரு பழைமை வாய்ந்த நகரம் என்ற கருத்திலிருந்து இன்று தொலைதூரம் வந்துவிட்டது. இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் தலைநகரம் என்று கூறுகின்ற வகையில் வாரம் ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டு வருகிறது. மிகப் பெரிய நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளைச் சென்னையில் திறந்துள்ளனர். மற்ற நிறுவனங்களும் சென்னையில் வணிகத்தைத் தொடங்க விரும்புகின்றனர்.

## முதலீட்டாளர்களின் விருப்பம் – தமிழகம்

❖ இன்று தமிழ்நாடு, முதலீட்டாளர்கள் விரும்பி முதலீடு செய்கிற இடமாக உருவெடுத்துள்ளது. பல்வேறு தனிப்பட்ட ஆய்வுகள், மாநிலத்தின் முதலீட்டு நிலையினை உயர்த்தி மதிப்பிட்டுள்ளது. எனவே, இந்தியாவில் பெருமளவில் அன்னிய முதலீடுகள் ஈர்ப்பதில் முதல் மூன்று இடங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்து வருகிறது.

## எனது இலக்கு

❖ தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற ஒரு முதன்மை மாநிலமாக உருவாக்குவதே என்னுடைய குறிக்கோள் அல்லது கனவாகும். அதனைச் செயல்படுத்துகின்ற போது கனவுகள் உண்மையாகும். முறையாகத் திட்டமிடப்பட்டால் அதுவே பாதி இலக்கை அடைந்தது போல் ஆகும்.

## சட்டமன்ற உறுப்பினர்களின் கடமை

❖ இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பெற்றது சட்டமன்றம். மக்களின் ஆசைகள் மற்றும் விருப்பங்களை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறுபவர்களாக இருப்பவர்களே சட்டமன்ற உறுப்பினர்கள். மக்களின் தேவைகள் என்ன. நாட்டின் தேவைகள் என்ன, நாட்டின் வளர்ச்சி என்பது எவ்வாறு அமையப்பெற வேண்டும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இவைகளையெல்லாம் எவ்வாறு நிறைவேற்றி வருகிறது, என்பதை எல்லாம், ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது தான் சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

## பணி செய்வதே என் கடமை

❖ யார் போற்றினாலும், தூற்றினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழக மக்களின் வளர்ச்சி தான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்.

## காவலர்களுக்குப் பயிற்சி

❖ காவலர்கள் பணியாற்றுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் மட்டும், அவர்கள் தங்கள் பணியினை திறம்பட ஆற்றிட இயலாது. காவலர்கள், தங்களது கடமையை திறம்பட ஆற்றுவதற்கு பயிற்சி மிகவும் அவசியம் ஆகும்.

## தகுதியானவர்களுக்கே கருணை

❖ மனிதவாழ்வு சிறப்புற மேம்படுவதற்காக ஏற்படுத்தப் பட்டவைதான்சட்டங்கள்,சட்டத்தைசெயல்படுத்தும்போது, மனிதநேயத்துடன் அதனை செயல்படுத்த வேண்டும். தகுதி இல்லாதவர்களிடத்தில் அபரிமிதமான கருணை இருக்கக் கூடாது. தகுதியானவர்களிடம்தான் கருணை காட்ட வேண்டும்.

## காவலர்களுக்குத் தேவை அளவுக்கு உட்பட்ட கடினம்

❖ காவல் துறையில் பணி புரிவோர் நீங்கள், சட்டத்தை நிலைநாட்டுவதில், மனித நேயத்துடன் பணிபுரியும் அதே நேரத்தில், மென்மையான அணுகுமுறை பயன்பெறாத இடத்தில் கடினமான அணுகுமுறையை பயன்படுத்த வேண்டும். ஆனால், அந்த கடினமும் தேவையான அளவுக்கு உட்பட்டே இருக்க வேண்டும்.

## அறிவுசார் மனிதவள மேம்பாடு

❖ ஒருமாநிலம்,நிறைந்தபொருளாதாரவளர்ச்சிஅடைய வேண்டும் என்றால், அங்கு மனித வள மேம்பாட்டிற்கு, குறிப்பாக, அறிவுசார் மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவுசார் மனித வள மேம்பாட்டில் முக்கிய அங்கம் வசிப்பது கல்வி அறிவு தான்.

## அமைதியே இன்றியமையாதது

❖ நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தனி மனித மேம்பாடும் நிலைத்திட இன்றியமையாததாக விளங்குவது அமைதி. அத்தகைய அமைதி சூழலை ஏற்படுத்துவதில், காவல் துறை முக்கியப் பங்காற்றுகிறது.

## திறமையுடன் பணிசெய்ய பயிற்சி அவசியம்

❖ பயிற்சிதான் மனிதனை பக்குவப்படுத்தும். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயிற்சி பெற்றால் தான் ஒருவர் தன்னுடையப் பணியைத் திறமையாகவும், செம்மையாகவும் செய்ய இயலும்.

## ஒழுக்கம் மனிதனைத் தெய்வமாக்கும்

❖ ஒழுக்கம் என்பது எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும், தூய்மையாக நடந்து கொள்வதாகும். இவ்வொழுக்கமே, மனிதனை மனிதனாகவும்,

தெய்வமாகவும் உயர்த்தும் வன்மை பெற்றிருத்தலால், இது உயிரைக் காட்டிலும் உயர்வானது.

## மக்கள் பாராட்டைப் பெற ஒழுக்கம் அடிப்படை

❖ ஒழுக்கம் இருந்தால்தான், விருப்பு வெறுப்பின்றி; வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி; சட்டத்தின் மாட்சிமையை நிலைநிறுத்தும் வண்ணம், காவல் துறையினர் தங்கள் கடமையை ஆற்ற முடியும். அவ்வாறு கடமை ஆற்றும்போது தான், காவலர்கள் தங்கள் பணியினைச் செவ்வனே செய்கிறார்கள் என்று மக்களே காவல் துறையினரின் பணிகளைப் பாராட்டுவார்கள்.

## நாடு அதை நாடு!

❖ இந்தியா என் தாய்நாடு, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தோர், அவர்களுடைய வளம் மற்றும் நலனில் மட்டுமே எனது மகிழ்ச்சி உள்ளது.

## அன்பு செலுத்துவதற்கே இல்லறம்!

❖ இல்லறம் என்பது அன்பு செலுத்துவதற்காகவே. அதனால் தான், இல்வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் இருப்பதற்கு அன்பும், அறமும் தேவை என்று வான்புகழ் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

## இல்லற வாழ்வு என்பது...

❖ இல்லற வாழ்வு என்பது இரு ஆன்மாக்களின், மனங்களின், உணர்வுகளின் முழுமையான இணைப்பு.

## விசால மனம் வேண்டும்

❖ இல்லற வாழ்வு இனிமையாக இருக்க வேண்டுமென்றால், சலனமில்லாத, விசாலமான மனம் வேண்டும். பொறுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். இன்றைக்கு பல குடும்பங்களில் அர்த்தமில்லாத சண்டைகள் தான் அதிகம். அவ்வாறு சண்டை போடுபவர்கள் அடுத்தவரின் எண்ணத்திலிருந்து சிந்தித்துப் பார்த்தால், சச்சரவுக்கே இடமில்லாது போய்விடும்.

## நல்லதொரு குடும்பம்

❖ கணவனும், மனைவியும் அன்பாக இருக்க வேண்டும்; ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்; விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை வேண்டும். இதுதான் நல்ல குடும்பத்திற்கு அழகு.

## திருமணம்... இரு குடும்பங்களின் சங்கமம்!

❖ திருமணம் என்பது இரு மனம் இணைவது மட்டுமல்ல; இரு வேறு குடும்பங்களின் சங்கமம்.

## திறமைமிக்க மாலுமி கடக்க வேண்டிய சவால்!

❖ அமைதியான கடல் நல்ல மாலுமியை உருவாக்காது. ஆர்ப்பரிக்கும் அலைகள், மிரட்டிப் பார்க்கும் இடி, மின்னல், மழை, சூறாவளிக் காற்று ஆகியவற்றினைக் கொண்ட கடல்தான் ஒரு மாலுமிக்கு சவால். இந்தச் சவாலை மாலுமி வெற்றிகரமாகக் கடந்து விட்டால், அவர் சிறந்த, திறமைமிக்க மாலுமியாகிவிடுவார்.

## ஒற்றுமையே உயர்வு

❖ இன்பமும், துன்பமும் நிறைந்ததுதான் இல்வாழ்க்கை. மணமக்கள் ஒற்றுமையுடன் துன்பத்தை எல்லாம் தகர்த்தெறிந்துவிட்டால் வாழ்க்கை சுவையாக அமையும்.

## சவால்களை எதிர்கொள்ளும் துணிவும் தெளிவும் பெறுக!

❖ வாழ்க்கையே ஒரு சவால் தான். அதுவும் திருமண வாழ்க்கை என்பது சவால்கள் நிறைந்தது தான்.

இந்தச் சவால்களை எதிர்கொள்ளும் துணிவையும், தெளிவையும் (மணமக்கள்) பெற வேண்டும்.

## சவாலைச் சமாளி. சமூகம் வரவேற்கும்

❖ சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகி ஓடும் மனிதர்களை விட எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள். சவால்களைக் கண்டு அஞ்சுபவர்களைச் சமூகம் கண்டு கொள்வதில்லை. சவால்களைத் துணிச்சலுடன் சந்திக்கும் நபரைத்தான் சமூகம் வரவேற்கும்.

## நம்மை வாழ வைப்பது துணிவே!

❖ சந்திக்க வேண்டிய சவால்களை அடையாளம் கண்டு, அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ள முடிவெடுத்துவிட்டால், அதற்கான வழிமுறைகள் தானாகத் தோன்றும். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடும் கோழைத்தனத்தை விட எதிர்த்துப் போராடும் துணிவே நம்மை வாழ வைக்கிறது.

## எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகம் இல்லை

❖ ஜனநாயகம் என்பது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இரண்டும் சேர்ந்ததுதான். எதிர்க்கட்சி இல்லாமல் ஜனநாயகத்தை நிலை நிறுத்த முடியாது என்பதுதான் எனது திடமான எண்ணமாகும்.

## பெரும்பான்மையோருக்கு பயனளிக்க...

❖ எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால்தான், அந்தக் கருத்துகளைச் சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மையோருக்குப் பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இயலும்.

## மாறுபட்ட சிந்தனைகளும் மாற்றுக் கருத்துகளும்

❖ மாறுபட்ட சிந்தனைகளைச் செவிமடுத்து, ஒரே பொருள் பற்றிய வேறு வேறு கருத்துகளையும் சீர்தூக்கிப் பார்த்தால்தான் பெரும்பான்மையான மக்களுக்கு நன்மை செய்ய இயலும்.

## எதிர்க்கட்சியின் இலக்கணம்

❖ எதிர்க்கட்சி என்றால் அரசின் கொள்கைகளை, திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்ற பொருள் இல்லை. அரசுத் திட்டங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவது தான் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும்.

## சோற்றைப் பதம் பார்க்கலாம்
## பானையை உடைத்து விடக்கூடாது

❖ “ஆளுங்கட்சி கொதிக்கிற சோறு என்றால், எதிர்க்கட்சி பதம் பார்க்கிற அகப்பை” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்கள். ஆனால், சோற்றைப் பதம் பார்க்கிறேன் என்று கூறி பானையை உடைக்கும் பணியில் அகப்பை ஈடுபடுமானால், அகப்பையைப் பதம் பார்க்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

## உலகிலேயே கடினமான காரியம்

❖ ஓடுகின்ற நதியில், பாய்கின்ற ஆற்றில் ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கும். அதற்குப் பெயர்தான் கரண்ட். அந்த ஆற்றில், நதியில் நீந்த வேண்டும் என்று நினைப்பவர் அந்த நீர் ஓடுகின்ற பாதையிலேயே, அந்த ஈர்ப்பு சக்தி, கரண்ட் பாய்கின்ற திசையிலேயே நீந்திச் சென்றால் நீந்துவது என்பது மிகவும் எளிதான காரியம். அவர் எந்த சிரமமும்பட வேண்டிய அவசியம் இல்லை. அந்த கரண்டே அவரை ஈர்த்துச் சென்று அக்கரையில் சேர்த்துவிடும். ஆனால், அதற்கு மாறாக ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலையால் அந்தக் கரண்டை எதிர்த்து எதிர் நீச்சல் போட வேண்டுமென்றால் அதைப் போன்ற ஒரு கடினமான காரியம் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது.

## மாநிலங்களுக்கிடையே
## ஒத்திசைவு மிக அவசியம்

❖ இன்றுள்ள பல அடுக்கு ஆட்சி முறையில் இந்தியா போன்ற ஒருங்கிணைந்த அமைப்பில் பிற மாநிலங்களுக்கு இடையேயான ஒத்திசைவான தொடர்புகள் விலக்க இயலாதவை ஆகும். இந்த உலகம் புனைவியலாக சிறியதாகின்றது என்று கருதுமிடத்து மாநிலங்கள் தன்னந்தனியாக நிலைப்பதோ, தொடர்வதோ கற்பனை செய்திடவும் இயலாததாகும்.

## அனைத்துக் கட்சியினரின் உறுதுணை

❖ வீணையின் நரம்புகள் தனித்தனியாக இருந்தாலும், அதை விரலாலே மீட்டுகின்ற போது, ஒரே இசையை எழுப்புவதைப் போல, அனைத்துக் கட்சியினருக்கும் பொதுவான நோக்கமாக விளங்கும் தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் தமிழக மக்களின் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்தும் எனது நடவடிக்கைகளுக்கும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் எனது முயற்சிக்கும், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துக் கட்சியினரும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

## கலிங்கமும் தமிழ்நாடும்

❖ பண்டையக் காலத்தில் மிகப்பெரிய ராணுவக் கட்டமைப்பையும் சிறந்த பூகோள அடையாளமும் கொண்டதாக கலிங்க நாடு திகழ்ந்தது. தமிழ்நாட்டுக்கும் ஒடிசா மாநிலத்திற்கும் இடையேயான கலாச்சார மற்றும் கலைத் தொடர்புகள் சோழப் பேரரசு காலத்திலே இருந்தது. தமிழ்நாட்டைப் போல வரலாறு மற்றும் பாரம்பரியப் பெருமை உள்ள மாநிலமாக ஒடிசா திகழ்வதால் ஒடிசா மாநிலத்துடன் தொடர்பு வைத்திருப்பது மிகப் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

## தமிழர் வாழ்வின் நெறிமுறைகள்

❖ 5 ஆயிரம் ஆண்டுகளின் நாகரிகம் தலைமுறை தலைமுறையாகச் செம்மை பெற்று வந்தவையே நம் வாழ்வின் நெறிமுறைகள்.

## தேசத்தின் வளர்ச்சி...

❖ ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதாக இருக்க வேண்டும். அரசின் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் மக்கள் நலன் கருதியே அமைய வேண்டும்.

## மாநிலங்களின் உறவு

❖ நமக்கு மொத்தப் பயனை அளிக்கும் வகையில் நாம் (மாநிலங்கள்) இணைந்து செயலாற்றுவதும் வளர்ச்சி பெறுவதும், நன்கு புரிந்து கொள்ளப்பட்ட பரஸ்பர தொடர்புகள் பெறுவதுமான இச்சூழ்நிலை, மிக உயர்ந்த அளவிலான பரஸ்பரம் சார்ந்திருக்கின்ற நிலைமை உருவாகின்றதைச் சுட்டுகின்றது. இந்தச் சொற்றொடர் எளிதாக சொல்லப்படுகிறது. ஆயின் இதனைச் செயல்படுத்திட அதிக அளவில் முயற்சி தேவைப்படுகிறது.

## விடுதலைப்போரில் தமிழகத்தின் மகத்தான பங்கு

❖ ஆங்கிலேயர்களை இந்திய மண்ணில் இருந்து விரட்டி சுதந்திரத்தைப் பெற பாரதம் முழுவதும் தன்னலமற்ற தியாகிகள் பலர் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈந்து அரும்பாடுபட்டனர். ஆங்கிலேய அடிமைத்தளையைத் தகர்த்தெறிய நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு மகத்தானது.

## எனது இலட்சியம்

❖ தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்குவதுமட்டுமல்லாமல்,விரைந்தவளர்ச்சி

எய்தும் நடுத்தர வருவாய் நாடுகளுக்கு இணையாகத் தமிழகத்தின் வளர்ச்சி இருத்தல் வேண்டும் என்பதே எனது இலட்சியம் ஆகும்.

## உண்மையான சுதந்திரம்

❖ சுதந்திரம் என்பது ஒவ்வொருவருக்கும் வேண்டும். ஆனால், அந்தச் சுதந்திரம் வரம்பை மீறாமல் இருக்க வேண்டும். எல்லா விதத்திலும் கண்ணியம் மற்றும் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும். அது தான் உண்மையான சுதந்திரம்.

## சுதந்திரம் என்பது அடுத்தவர் உரிமையில் தலையிடுவதல்ல

❖ எனக்குச் சுதந்திரம் இருக்கிறது என்று அடுத்தவரின் சுதந்திரத்தை, உரிமையை, வாழ்வாதாரத்தைப் பறிக்கும் விதத்திலோ, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ எவரேனும் செயல்பட்டால், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## என் கடமை

❖ "உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல; உங்களால் நான்" என்ற உணர்வோடு, நான் எனது கடமையை நிறைவேற்றிட தமிழக மக்களாகிய நீங்கள் எல்லாம் எனக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

## உழவர்க்கு உதவும் வங்கிகள்

❖ இந்திய நாட்டின் செல்வம் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், தனியார் வசம் இருந்த வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இதன் காரணமாக, ஏழை உழவர்களுக்கு, விவசாயத்திற்காக வங்கிகள் கடன் கொடுத்து உதவுகின்றன.

## துன்பமிலா வாழ்வுக்கு சேமிப்பு

❖ "சிறு துளி பெரு வெள்ளம்", "சிறுகக் கட்டி பெருக வாழ்" போன்றவை சிறுசேமிப்பின் இன்றியமையாமையை விளக்குகின்றன. "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பது வள்ளுவரின் வாக்கு. பொருளைப் பெறாவிட்டால் பட்டறையில் இரும்பு படுவது போன்று துன்பப்பட வேண்டும் என்பதை உணர்ந்து மக்கள் எல்லோரும் சேமிப்பில் ஈடுபட வேண்டும்.

## மக்கள் நலனில் வங்கிகளின் பங்கு

❖ வேலையின்றித் தவிக்கும் படித்த இளைஞர்கள் சுயதொழில் தொடங்க வங்கிகள் நிதி உதவி செய்கின்றன. ஆட்டோ மற்றும் வாகன ஓட்டுநர்கள் சொந்தமாக வாகனங்களைப் பெற்றுத் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வங்கிகள் கடன் உதவி புரிகின்றன. மக்களின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான இரு சக்கர வாகனம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை, குறைந்த வட்டியில், தவணை முறையில் பெற வங்கிகள் உதவுகின்றன. மாற்றுத் திறனாளிகள் வாழ்வு சிறக்க வங்கிகள் பெரிதும் உதவி புரிகின்றன. சிறிதும் வளர்ச்சி அடையாத சிற்றூர்களைத் தம் மேற்பார்வையில் கொணர்ந்து பல்வேறு நலத் திட்டங்களை, வங்கிகள் செயல்படுத்துகின்றன.

## சேமிப்பால் விளையும் பயன்

❖ சிறுசேமிப்பின் மூலம் பணம் வீணாகாமல் பெருகுவதோடு, வட்டியும் கிடைக்கிறது; பணம், பாதுகாப்பாகவும் இருக்கிறது. இந்தச் சேமிக்கும் பழக்கம் சிக்கனத்தை வளர்ப்பதோடு, எதிர்பாராச் செலவுகளுக்கும் கைகொடுக்கிறது.

## நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனளிக்கும் சேமிப்பு

❖ ஒரு மலையிலிருந்து பெருக்கெடுத்தோடும் ஆறு, பயனில்லாத இடங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் கலப்பதால் யாருக்கும் எவ்விதப் பலனும் இல்லை. அந்நீர் அணைகளில் தேக்கப்பட்டு, வாய்க்கால் வழியாக, வயல்களுக்குப் பாய்ந்தால் பயிர் செழிக்கும், உயிர்கள் வாழ வழிவகை ஏற்படும். அது போல, ஒரு மனிதன் தன் உழைப்பினால் ஈட்டிய பணத்தைத் தனக்கும் தன் நாட்டிற்கும் பயன்பட சேமித்தல் அவசியம்.

## பணத்தால் பெற இயலாதவையும் உலகில் உண்டு

❖ பணம் மட்டுமே வாழ்க்கையாகி விடாது. பணத்தை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பெற்றுவிட இயலாது. பணத்தால் பெற இயலாதவையும் இந்த உலகத்திலே உண்டு.

## சட்டமன்ற ஜனநாயகம்

❖ சட்டமன்ற ஜனநாயகம் என்பது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றை முழு அளவில் உறுதிப்படுத்தும் ஒரு சீரிய அமைப்பாகும்.

## பணமும் நல்ல மனமும் வேண்டும்

❖ பணத்தால் நல்ல கட்டில், மெத்தை, தலையணை ஆகியவற்றை வாங்க இயலும். ஆனால், அவை மட்டுமே நமக்குத் தூக்கத்தைக் கொடுக்காது. பணத்தால் சிறந்த சத்தான உணவு வகைகளை வாங்க இயலும். ஆனால், பணம் பசியை ஏற்படுத்தாது. நோய்வாய்ப்பட்டால், அதனைச் சரி செய்வதற்கு மருந்து மாத்திரைகளைப் பணத்தால் வாங்க இயலும். அழகு சாதனைங்களைப் பணத்தால் வாங்க இயலும். ஆனால், பணத்தால் உடல் ஆரோக்கியத்தைப் பெற இயலாது. எனவே, பணத்துடன் கூடிய நல்ல மனமும் வேண்டும். அதுவே எப்பொழுதும் நமக்கு நல்ல மகிழ்ச்சியை தரும்.

## வங்கிப் பணி

❖ வங்கி அதிகாரிகள், மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறும் வகையில் குறைந்த வட்டியில் அதிக தவணை முறையில் அவர்களுக்குத் தேவையான கடன் உதவிகளை வழங்க வேண்டும். இதே போன்று, கடன் பெறுவோரும், வாங்கிய கடனை, தவறாமல் திரும்பச் செலுத்தி, மேலும், பல பயன்களை வங்கி மூலம் பெற வேண்டும். இந்தக் கொடுக்கல் வாங்கலில் இரு சாராரும் தங்கள் மனசாட்சிக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

## மலைக்கோட்டையைச் சுற்றியே மனம் சுழலும்

❖ தமிழகத்தின் ஒவ்வொரு தொகுதியும் என்னுடைய தொகுதிதான் என்றாலும், இது (ஸ்ரீரங்கம்) என்னுடைய சொந்தத் தொகுதி. நான் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தாலும், என்னுடைய எண்ணம் எல்லாம் மலைக்கோட்டையைச் சுற்றித்தான்.

## புனிதக் கடமை

❖ என்னை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியவர்கள் நீங்கள். நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமை, நன்றிக் கடன் என கருதுகிறேன். ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை.

## சட்டமன்ற உறுப்பினர்களின் ஜனநாயகக் கடமை

❖ சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். உண்மையை உரைப்பவர்களாகவும்; உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும்; மாற்றாரை மதிக்கும்

தன்மை கொண்டவர்களாகவும்; நியாயத்திற்குத் தலை வணங்குகிறவர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

## ஜனநாயகப் பண்புகளைக் கட்டிக்காத்திடுக!

❖ சட்டமன்ற ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகப் பண்புகளை எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த ஒரு நெருக்கடியிலும் செம்மையாகக் கட்டிக்காக்க வேண்டும்.

## அருமைவாய்ந்த ஆட்சிமுறை

❖ ஜனநாயகம் என்பது பண்பட்டதும், பயனுடையதும், ஆற்றல் மிகுந்ததும், அருமை வாய்ந்ததுமான ஆட்சி முறையாகும்.

## அனைவரின் நன்மையே குறிக்கோள்

❖ ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பேதம் இல்லாமல், நாட்டில் உள்ள அனைவரின் நன்மையையும், முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டது தான் ஜனநாயகம் ஆகும்.

## கொள்கையை தீர்மானிப்பவர் மக்களே!

❖ ஜனநாயகத்தில் மக்கள்தான் அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர்.

## கருத்துக்களைச் சுதந்திரமாகப் பிரதிபலிக்கும் இடம்

❖ உயரிய ஜனநாயக ஆட்சியில் சுதந்திரமாகக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் இடமாக இந்த தமிழ்நாடு சட்டமன்றம் திகழ்கின்றது.

## கண்ணயராக் காவல் பணி

❖ காவல் பணி என்பது கடினமானப் பணி. சட்டம் ஒழுங்கினைப் திறம்படப் பராமரிப்பது; குற்றங்கள் நிகழாமல் தடுப்பது; நிகழ்ந்துவிட்ட குற்றங்களைப் புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது; அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவது; போன்ற கடினமான பணிகளைக் காவல்துறை மேற்கொண்டு வருகிறது.

## இன்றியமையாத நடுநிலைமை

❖ வீணையிலிருந்து சரியான இசை வர வேண்டும் என்றால், அதனுடைய தந்திகள், அதாவது வீணையின்

நரம்புகள் இறுக்கமாகவும் இல்லாமல், தளர்வாகவும் இல்லாமல் நடுநிலைமையில் இருக்க வேண்டும். அது போல், இந்த அவை (சட்டமன்றம்) சீரோடும், சிறப்போடும் நடைபெற வேண்டுமென்றால் அதற்கு இன்றியமையாததாக விளங்குவது நடுநிலைமை.

## காவல்துறையின் பணி

❖ ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு இன்றியமையாததாக விளங்குவது காவல் துறையின் பணி ஆகும். மனித சமுதாயத்தை நெறிப்படுத்த வகுக்கப்படும் சட்டங்களை நிலைநாட்டுபவர்கள் காவல் துறையினர்.

## அமைதியை நிலைநாட்டும் காவல் பணி

❖ ஒருநாடுநல்லதொருபொருளாதாரவளர்ச்சியினை, சமுதாய மேம்பாட்டினை அடைய வேண்டுமானால் அங்கு அமைதி நிலவ வேண்டும். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக வேண்டும். இந்த அரிய பணியினை ஆற்றி வரும் துறையாகக் காவல் துறை விளங்குகிறது.

## காவல் துறையின் மகத்தான பொறுப்பு

❖ பொதுமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் அளிப்பதோடு மட்டுமல்லாமல்,

பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரமும், மன நிறைவும் அளிக்கும் மகத்தான பொறுப்பும் காவல் துறையிடம் தான் இருக்கிறது.

## சிறந்த ஜனநாயக முறை

❖ வளத்தைப் பெருக்குதல்; வாழ்வில் மக்கள் முன்னேற்றம் அடையச் செய்தல் ஆகிய கொள்கைகளில் ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் எந்தவித வேறுபாடும் இருக்க முடியாது. அதே சமயத்தில், அதை நிறைவேற்றுகின்ற முறையில், திட்டங்களின் வடிவமைப்பில் வேறுபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறு ஒருமனதாக, அதாவது unanimous ஆக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில், வேறுபாட்டினை ஒற்றுமையின் அடிப்படையில்; உடன்பாட்டின் அடிப்படையில்; அதாவது consensus–ன் அடிப்படையில் களைவதுதான் சிறந்த ஜனநாயக முறையாக இருக்கும். இல்லையெனில் ஜனநாயகம் செயலிழந்து, பேச்சு சுதந்திரம் மட்டுமே மிஞ்சி இருக்கும்.

## தீயணைப்புத் துறையின் தியாகப்பணி

❖ புயல், மழை, வெள்ளம், நில நடுக்கம், தீ விபத்துகள் போன்ற இயற்கை இடர்பாடுகளினால் மக்கள் அல்லல்படும் போது அவர்களை அரவணைக்கும்

கடமையினைத் தீயணைப்புத் துறையினர் ஆற்றி வருகின்றனர்.

## நல்வழிப்படுத்தும் சிறைத்துறை

❖ குற்றவியல் நீதி முறையின் அங்கமாக விளங்கும் சிறைத் துறைப் பணியாளர்கள், சிறைக் கைதிகளைச் சீர்திருத்துவது, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது, மீண்டும் குற்றம் இழைக்கா வண்ணம் அவர்களை நல்வழிப்படுத்துவது போன்றவற்றை இலட்சியமாகக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள்.

## தலைமைப் பண்பு

❖ ஒரு மாநிலத்தின் காவல் துறை உயர்ந்த குறிக்கோளுடன் செவ்வனே பணியாற்றுவது என்பது அந்த நாட்டை ஆளும் தலைவரின் தலைமைப் பண்பைப் பொருத்தே அமையும்.

## அரசின் உறுதிப்பாடு

❖ இந்த அரசு, தூய்மையான, வெளிப்படையான, செம்மையான மற்றும் பொறுப்புமிக்க நிருவாகத்தை அளிப்பதற்கு முற்றிலும் பொறுப்பேற்றுள்ளது.

## தமிழனின் குணம்

❖ தன்மானம் பெரிது என்று வாழ்பவன்தான் தமிழன்.

## மதிக்கத்தக்க சிறந்த வாழ்க்கை

❖ இந்த மாநில மக்கள், திட்டவட்டமாக நிருவாகப் பொறுப்பை நமக்கு அளித்ததன் மூலம், இந்த அரசிடம் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர். எனவே, ஏழை எளிய மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், மதிக்கத்தக்க, சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு சாத்தியமான அனைத்து உதவிகளும் அளிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது.

## நேர்மையுள்ள சமுதாயமே வளம் காணும்

❖ நியாயமும், நேர்மையும் உள்ள சமுதாயம் விரைவில் வளம் காணும் என்பது அனைவரும் நன்கு அறிந்த ஒன்றாகும். அத்தகைய சமுதாயம், பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருப்பதுடன், உண்மையான மகிழ்ச்சியுடன் நிலவும்.

## புதிய சிந்தனைகள்... வெற்றிக்கு வழி!

❖ ஒரு நிறுவனம் மேன்மை அடைய வேண்டும் என்றால்; அதன் விற்பனைத் திறன் அதிகரிக்கப்பட வேண்டும் என்றால்; வழக்கத்திற்கு மாறாக சிந்திக்க வேண்டும். புதிய சிந்தனைகள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். வெற்றியை அளிக்கும்.

## வெற்றி நிச்சயம்

❖ வியாபாரத்தில் புது யுக்தியுடன் தன்னம்பிக்கையும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

## ஆசிரியர் பணி

❖ ஒழுக்கத்தை, பண்பை, பொது அறிவை, ஆன்மீகத்தை மாணவ—மாணவியரிடையே எடுத்துச் சொல்லும் பணி ஆசிரியர் பணி.

## முன்னேற்றப் பாதை

❖ வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் படிப்பு மட்டும் இருந்தால் போதாது; கடுமையான உழைப்பும், தன்னம்பிக்கையும் தேவை. நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவும், திறமையும் தேவை.

## தன்னம்பிக்கை

❖ வாழ்க்கையிலே முன்னேற நினைக்கிறவர்களுக்கு தன்னம்பிக்கை மிகவும் முக்கியம். இந்தத் தன்னம்பிக்கையை மாணவ–மாணவியருக்கு இளம் பருவத்திலேயே ஏற்படுத்தினால் அவர்களால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை.

## பெற்றோரின் கடமை

❖ ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்பது ஒரு முக்கோண வடிவம். இதில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள்தான். அதே சமயத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி விட்டதாலேயே தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது. பெற்றோர் பிள்ளைகளை உயர்த்த உறுதுணையாக இருக்க வேண்டும்.

## நிச்சய வெற்றிக்கு...

❖ எந்தநிலைமையையும்சந்திப்பதற்கு,சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

## உலகையே அடக்கி நிற்கும் ஆற்றல் படைத்த திருக்குறள்

❖ இரண்டே வரிகளில் இருந்தாலும், அதனுள் உலகையே அடக்கி நிற்கும் ஆற்றல் படைத்தது

திருக்குறள். திருக்குறளில் திருவள்ளுவர் கூறிய கருத்துகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக விளங்குகின்றன. இதனால்தான், “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு” என்று பாடினார் மகாகவி பாரதியார்.

## உலகின் தலைமையிடத்திற்கு நம்நாடு வந்திட....

❖ நம் நாடு ஒரு சிறந்த நாடு. உலகின் தலைமையிடத்திற்கு வர நாம் முயற்சிக்க வேண்டும். நம் மக்களை தீவிரவாத அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதன் மூலமும், திட்டமிட்ட, நிலையான பொருளாதார மேம்பாட்டின் மூலமும் மட்டுமே இயலும்.

## மனித வளத்தை மேம்படுத்துவது கல்வியே!

❖ நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும்.

## மதிப்புமிக்க மாணவச் செல்வம்

❖ இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்புமிக்க செல்வம். கல்வியில் மேன்மை; விளையாட்டு மற்றும் போட்டிகளில்

திறமை; சேவை மனப்பான்மைக்கு வித்திடும் வகையில் சமுதாயத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு, ஆகியவை ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்க உதவுகின்றன.

## நாளைய நம்பிக்கை நட்சத்திரங்கள்...

❖ இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

## கல்வி வளர்ச்சி பெற வேண்டும்

❖ தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும்.

## சுற்றுப்புறத் தூய்மை மிக அவசியம்

❖ தூய்மை என்பது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் மாசுமறுவற்ற காற்றும், தூய்மையான குடிநீரும் கிடைக்கும் வண்ணம் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும்.

## ஆட்சி அதிகாரமும், பதவியும் எதற்காக ?

❖ என்னைப் பொறுத்த வரையில், எப்படியாவது ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல. மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்பது தான், என்னுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்றால் அதற்கு ஆட்சி அதிகாரம் முக்கியம். அதற்காகத்தான், இந்த முதலமைச்சர் பதவியை நான் வகித்துக் கொண்டிருக்கிறேன்.

## கொடை குணம்... அது பிறவிக்குணம் !

❖ கொடை கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும். பிறவிக் குணம் இல்லாமல் கொடை கொடுக்கிற மனம் தானாக வராது. அதேபோல் தான், தமிழர்களுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும் என்பதற்கும் மனம் வேண்டும்.

## பிள்ளைகளின் விருப்பத்தை மதித்திடுக !

❖ படிக்கும் ஆர்வத்தைப் பிள்ளைகளிடையே ஏற்படுத்தும் அதே சமயத்தில், அவர்களின் விருப்பத்திற்கேற்ற பாடத்தைப் படிக்க அனுமதித்தால் அனைத்து மாணவ – மாணவியருக்கும் வெற்றி உறுதி.

## தொண்டு என்பது...

❖ தொண்டு என்பது சுயநலமின்றி, பிறர் நலத்திற்காக உழைப்பது. அனைத்து மதங்களும் பிறருக்கு உதவுவதைப் போதிக்கின்றன.

## தொண்டுகள் பலவகை

❖ தொண்டுகளிலே பல வகை உண்டு. நாட்டுக்குச் செய்யும் சேவை "தேசத் தொண்டு". மக்களுக்குச் செய்யும் சேவை "மக்கள் தொண்டு". இறைவனுக்குச் செய்யும் சேவை "திருத்தொண்டு".

## வெற்றிக்கு வழி

❖ தொழிலிலே வெற்றி, தோல்வியுண்டு. ஆனால், தொண்டிலே தோல்வி என்பது கிடையாது. சுயநலமின்றி எந்தவிதப் பலனையும் எதிர்பாராமல், எந்தப் பணியைச் செய்தாலும் அதில் வெற்றி நிச்சயம்.

## மக்கள் சேவையில்...
## விவேகானந்தர் வழியில்...

❖ சுவாமி விவேகானந்தர் துறவியாக இருந்து மக்கள் சேவையைப் புரிந்தார். நானும் அவர் வழியில், அரசியலில் துறவறம் பூண்டு மக்கள் சேவையைச் செய்து வருகிறேன்.

## தமிழக மக்கள் நலனில் நான்

❖ தமிழக மக்களால் நான்; தமிழக மக்களுக்காகவே நான்.

## எல்லாமே தமிழக மக்கள்தான்!

❖ எனக்கு சுயநலம் என்பது அறவே கிடையாது. எனக்கென்று எதுவும் தேவையில்லை. எனக்கென்று

யாருமே கிடையாது. எனக்கு எல்லாமே தமிழக மக்கள் தான்.

## உலகை வாழ வைக்கும் பெண்ணாய் மகளிர் உயர்ந்திடுக !

❖ அறிவுக்கண் திறந்து, ஆக்கப்பூர்வமாய்ப் பணியாற்றி, உலகை வாழ வைக்கும் பெண்ணாக அனைத்து மகளிரும் உயர்ந்து விளங்கிட வேண்டும்.

## தொழிலும், தொண்டும்

❖ தொழில் தொண்டாகலாம். தொண்டு தொழில் ஆகிவிடக்கூடாது.

## இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகம் !

❖ தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெறும் வகையிலும்; நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை பெருக்கும் வகையிலும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும்; இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும்.

## நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு மத்திய அரசிதழில் ஏன் வெளியிட வேண்டும் ?

❖ இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான ஒரு நதிநீர் தாவாவை விசாரிக்க ஒரு நடுவர் மன்றத்தை

அமைக்கிற போது அந்த நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை வழங்கினாலும் சரி, இறுதித் தீர்ப்பை வழங்கினாலும் சரி, அதைச் செயல்படுத்த வேண்டும் என்றால், அது செயல்பாட்டுக்கு வரவேண்டும் என்றால், அதை மத்திய அரசு, தனது அரசிதழில்–மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும்.

## இளைஞர்கள் சிறந்து விளங்க...

❖ நமக்கெல்லாம் ஒரு மிகப்பெரிய வழிகாட்டி சுவாமி விவேகானந்தர். தீயைப்போன்ற சூடான அவரது கருத்துக்களை, தன்னலமற்ற சேவையை, திடமான மன உறுதியை இளைஞர்களாகிய நீங்கள் பின்பற்றினால், நீங்களும் சிறந்து விளங்கலாம்; இந்த நாடும் சிறந்து விளங்கும்.

## இளைஞர் தம் ஆற்றலை வெளிக்கொணரும் விளையாட்டு

❖ உடல் உறுப்புகளின் பணிகளை ஒழுங்கு படுத்துவதற்கும், நினைவாற்றலை பலப்படுத்து வதற்கும், இளைஞர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கும், ஆற்றல்களை வெளிக் கொணருவதற்கும், உடல் புத்துணர்ச்சி பெறுவதற்கும், நம் நாட்டு இளைஞர்களின் ஆற்றல் உலகெங்கும் பரவுவதற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு.

## தமிழர்தம் உரிமை; சமரசம் என்பதே இல்லை

❖ தமிழர்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

## கொடை கொடுக்க செல்வம் மட்டும் போதுமா ?

❖ கொடை கொடுக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது. கொடை உள்ளமும் கூர்த்த அறிவும் வேண்டும்.

## ஆற்றல் வாய்ந்த ஜனநாயக நாடு இந்தியா

❖ நமது ஜனநாயக அரசுக்கு அடித்தளமாகத் திகழும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த நமது அரும்பெரும் தலைவர்களின் தொலைநோக்கு மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டும் கண்ணோட்டம் காரணமாக, துடிதுடிப்பு ஆற்றல் வாய்ந்த ஒரு ஜனநாயக நாடாக இன்று இந்தியா செயல்பட்டு வருகிறது.

## இந்திய அரசியல் அமைப்பின் 3 தூண்கள்

❖ சட்டமன்றம், நிருவாகம் மற்றும் நீதித்துறை ஆகிய 3 தூண்களின் மீது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஒவ்வொரு தூணும் தனித்து இயங்காமல் ஒன்றிணைந்து செயல்படுகின்றது.

இந்த ஒன்றிணைந்த செயல்பாடு, அரசியல் அமைப்புச் சட்ட அடிப்படையிலான, நீதி, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் கிடைக்கச் செய்வதை உறுதி செய்கிறது.

## உலகின் வேறு எந்த நாட்டுக்கும் சளைத்தது அல்ல நமது நீதித்துறை

❖ நம்பகத்தன்மை, ஒளிவுமறைவற்றதன்மை, உரிய நேரத்தில் நீதிகிடைப்பது என்ற அடிப்படையில், நமது நீதித்துறை அமைப்பு, உலகின் வேறு எந்த நாட்டுக்கும் சளைத்தது அல்ல என்பதை உறுதிப்படுத்துவது, நமது புனிதமான கடமையாகும்.

## பெண்கள் அச்சமின்றி வாழும் மாநிலம்– தமிழகம்

❖ சட்டத்தின் முன், ஆண், பெண் பாகுபாடின்றி அனைவரும் சமமானவர்கள் என்ற இலக்கை எட்டுவதில் இன்று நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக முத்திரைபதித்து, பெண்கள் பாதுகாப்பு உணர்வுடன் அச்சமின்றி வாழும் மாநிலமாகவும் திகழ்கிறது.

## தமிழ் மொழியை உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக ஆக்க வேண்டும்

❖ சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்மொழியை அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற தமிழக

மக்களின் நீண்டகால கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். நீதித்துறை நிருவாகத்தின் பலன்கள் உண்மையிலேயே மக்களுக்குச் சுலபமாக கிடைக்க வேண்டும் என்றால், உயர்நீதிமன்றத்தில் மாநில மொழிதான் பயன்படுத்தப்பட வேண்டும்.

## தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்

❖ மண்ணுலகத்தை விட்டு மறைந்தாலும் மக்களின் மனங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்பவர், மக்களின் மகத்தான சக்தி பெற்றவர்; வள்ளல் என அனைவராலும் போற்றப்பட்டவர்; தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்தவர்; அன்புக்கு அடிமையாய்; ஆணவத்திற்கு அடிபணியாதவராய் விளங்கியவர் மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், பாரத் ரத்னா, தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

## ஆக்கப்பூர்வமான விமர்சனத்திற்கு வரவேற்பு அரசியல் காழ்ப்புணர்ச்சிக்கு கடும் எதிர்ப்பு

❖ நிறை, குறைகள் மிகைபடாமல் மக்கள் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு தூய நோக்கத்துடன் எடுத்துரைக்கும் ஆக்கப்பூர்வமான விமர்சனத்தை நான் வரவேற்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவமும் என்னிடம் உண்டு. அதே சமயத்தில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, உண்மைக்கு புறம்பானவற்றை சொல்வது, சிறிய விஷயத்தைக் கூட

பூதாகரமாக்கிச் சொல்வது, நிறைகளை இருட்டடிப்புச் செய்வது போன்ற விமர்சனங்களை நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது.

## வளர்ச்சிக்கு வழி

❖ வசவுகள் நீடித்து நிலைக்காதவை. விருப்பு, வெறுப்பற்ற கருத்துகளே வளர்ச்சிக்கு வழி வகுக்கும்

## நா காக்க... அளந்து பேசுக,..!

❖ பொதுவாழ்வில் உள்ளவர்கள், அரசியலில் ஈடுபடுபவர்கள், அதுவும் ஒரு கட்சிக்குத் தலைவர் என்ற மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் நா காக்க வேண்டும். எங்கே பேசினாலும், எப்போது பேசினாலும், என்ன பேசுகிறோம் என்பதை அளந்து ஒவ்வொரு வார்த்தையையும் பேச வேண்டும்.

## பொது வாழ்வின் தேவை நிதானம்–ஒழுங்கு–கட்டுப்பாடு

❖ பொது வாழ்வில் ஒரு நிதானம் இருக்க வேண்டும், ஒரு ஒழுங்கு இருக்க வேண்டும், ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

## மாநிலத்தின் முதல் கடமை

❖ ஒவ்வொரு மாநிலத்தின் முதல் மற்றும் முக்கிய பணி யாதெனில், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதும், சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதும் குடிமக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதுமே ஆகும்.

## சமூகப் பொருளாதார வளர்ச்சி

❖ மாநிலத்தின்வளர்ச்சிமற்றும்மேம்பாடு,அந்நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பு, சூழலோடு இணைந்த ஒன்றாகும். அமைதியான சூழ்நிலை இருந்தாலன்றி, மற்றபடி, நாம் சமூகப்பொருளாதார வளர்ச்சியை எய்த இயலாது.

## மத்திய அரசும் மாநிலங்களும் சமபங்கு கூட்டாளிகள்

❖ நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரிப்பதற்கு, மாநிலங்களின் ஒருங்கிணைந்த உழைப்பும், மத்திய மாநில அரசுகளுக்கிடையே புரிதல் நிலையும் இருப்பது அவசியம் என்பதோடு, உள்நாட்டு சச்சரவுகளிலிருந்து தேசத்தைப் பாதுகாப்பதில், மத்திய அரசுடன் மாநிலங்களும் சமபங்கு வகிக்கும் கூட்டாளிகள் என்ற அடிப்படையில் ஒரு நல்லுறவு இருப்பதும் இன்றியமையாததாகும்.

## நலமான மாநிலம்—வளமான மாநிலம்

❖ நலமான மாநிலமே வளமான மாநிலம் ஆகும்.

## மகிழ்ச்சியும் பெருமிதமும் தந்திடும் சுதந்திரம் என்னும் சொல்!

❖ சுதந்திரம் என்ற வார்த்தையே நமது மனங்களில் மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமித உணர்வையும் ஏற்படுத்துகிறது.

## சுதந்திரத்தின் பல்வேறு பரிமாணங்கள்

❖ சுதந்திரம் என்பது பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், கல்வி சுதந்திரம், வேலைவாய்ப்பு சுதந்திரம், சிந்தனை சுதந்திரம் என பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. சமூக, பொருளாதார காரணிகளால் ஒடுக்கப்படாமல் ஒவ்வொரு தனி மனிதருக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக் கொணரச் செய்வதே உண்மையான சுதந்திரத்திற்கான இலக்கணம்.

## தமிழகமே எனது குடும்பம்

❖ தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்; தமிழக மக்களின் நலனே என் நலன்

## மகிழ்ச்சி கொண்டாடும் தருணம்

❖ பட்டமளிப்பு விழா நிகழ்வு என்பது, ஆண்டு முழுவதும் இரவு, பகல் பாராமல் மேற்கொண்ட கடின உழைப்பு பளிச்சிடுவதைக் குறிப்பதாகும். நீங்கள் மாறி வரும் காலத்திற்கு ஏற்ப ஆற்றலுடனும், அச்சமின்றியும் உங்களது சக்திகளை முறைப்படுத்தி சமூகத்தில் பூரணத்துவத்துடன் முன்னேறிச் செல்வதற்கு தயாராக இருக்கிறீர்கள். மாணவர்களும், இத்தகைய நிலையை அடைவதற்காகக் கடின உழைப்பினை மேற்கொண்ட அவர்களது பெற்றோரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் தருணம் இதுவாகும். ஆசிரியர்களுக்கு அவர்களது கடின உழைப்புக்கான அங்கீகாரமாகும்.

## அறிவுலகின் கோயில்கள்

❖ பல்கலைக்கழகங்கள் அறிவுலகின் கோயில்கள். இங்கு மாணவர்கள் அறிவின் ஆழத்தை அறிந்து கொள்ள வழிகாட்டப்படுகிறார்கள். இவைகள்தான் சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சியின் முக்கியமான அமைப்புகளாகத் தொடர்ந்து கருதப்பட்டு வருகின்றது.

## கல்வியாளர்களின் சமூக உறுதி

❖ தனிப்பட்ட நிபுணத்துவத்தை அடைவதற்கு மட்டுமல்லாது, நாட்டின் சாதனையையும், முயற்சியையும் உயர்த்திக் கொள்வதற்குப் பல்கலைக்கழக மேம்பாடு அவசியம். கற்றுக்கொள்வது இருவழி நடைமுறையாக இருத்தல் வேண்டும். மாணவர்கள்–பேராசிரியர்கள் தங்கள் மனங்களில் முழுவதுமாக ஈடுபாட்டுடன் கல்வி இருக்க வேண்டும். கல்வியாளர்களின் சமூக உறுதி புறக்கணிக்கப்படக்கூடாது.

## சமத்துவத்தையும் பரிவுணர்வையும் கைவிடலாகாது

❖ துரிதமாக நியாயம் வழங்க வேண்டும் என்பதற்காக சமத்துவத்தையும், பரிவுணர்வையும் கைவிட்டு விடக் கூடாது.

## பெண்களுக்கு அர்த்தமுள்ள சமூக நீதி

❖ புறக்கணிக்கப்பட்ட பெண்கள் சமூகத்தை, தலைமைப் பொறுப்புக்குத் தயார் செய்வது மிகவும் ஒரு கடினமான செயல். அவர்களது வாழ்வைப் பாதிக்கக்

கூடிய, அவர்களோடு இணைந்த பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக, சட்டம் மற்றும் கொள்கை மாற்றங்களில் நேரடிப் பங்களிப்பு அளித்து பெண்களின் உரிமையை நிலைநிறுத்துவதன் மூலம்தான் அர்த்தமுள்ள சமூக நீதியை அடைய முடியும்.

## சவால்தான் சாதனைக்கு வழிவகுக்கும்

❖ வாழ்விலும், பணியிலும் முன்னேற தேவையானது சவால். தடைகள் ஏற்படும் போது தான் உத்வேகம் பிறக்கும். தடைகளை தகர்த்தெறிய முனையும் போது தான் புதிய வழிகள் பிறக்கும். சவால் தான் சாதனைக்கு வழி வகுக்கும்.

## தன்னம்பிக்கையின் மறு பெயர்

❖ பணியில் ஏற்படுகின்ற சவால்களை எதிர்கொள்ள தேவை துணிச்சல். துணிச்சல் என்பது தன்னம்பிக்கைக்கு மறு பெயர். அந்த துணிச்சல் இல்லையென்றால் சமயத்தில் உயிரையே காப்பாற்றிக் கொள்ள இயலாமல் போய்விடும்.

## செய்யும் தொழில் இனிமையாகும்

❖ செய்யும் தொழிலில் நாம் ஒன்றிப்போய் விடும் போது அந்தத் தொழில் முழுமை பெறுகிறது. அந்தத் தொழிலில் உள்ள சுமை சுமையற்றதாகி அதுவே இனிமையானதாகி விடுகிறது.

## மனிதனின் உன்னத கலைப்படைப்பு சினிமா;

❖ மனிதன் நாகரிகமடைந்து உருவாக்கிய படைப்புகளிலேயே உன்னதமான கலைப் படைப்பு சினிமா என்று சொன்னால் அது மிகையாகாது.

## மக்களை ஈர்க்கும் வலிமை மிக்க திரைப்படம்

❖ சினிமா கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, இசை, இலக்கியம், ஓவியம், நாட்டியம், நாடகம் என, பல கலைகள் மக்களின் மனதை மகிழ்விக்கவும், வளப்படுத்தவும், பலப்படுத்தவும் பயன்பட்டன. இந்தக் கலைகளோடு, அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் நவீன அறிவியல் யுக்திகள் மற்றும் கலைகளும் சினிமாவில் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் தான், வேறு எந்தக் கலை வடிவத்தையும் விட எளிதாக மக்களை ஈர்க்கும் வலிமை திரைப்படத்திற்கு இருக்கிறது.

## பல்வகையிலும் உதவிடும் திரைப்படங்கள்

❖ உலகின் நெடுந்தூரம் சென்று காண முடியாத அற்புதங்களை, இருந்த இடத்திலிருந்து காண திரைப்படம் வழி வகுத்துள்ளது. பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க உறுதுணையாக திரைப்படத் துறை உள்ளது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, பல்வேறு துறைகளில் திரைப்படம் உதவி செய்கிறது. அரசின் நிகழ்ச்சிகளை, ஆக்கப்பணிகளை, மக்கள் நலத் திட்டங்களை, மக்களிடையே எடுத்துச் செல்ல திரைப்படங்கள் பெரிதும் உதவுகின்றன.

## மக்களை நல்வழிப்படுத்தவே திரைப்படங்கள்

❖ திரைப்படங்கள் மக்களை நல் வழிப்படுத்து வதற்காகவே அமைய வேண்டும்.

## தமிழ்த் திரைப்படத்துறையினர் அடுத்தவரும் வாழவேண்டும் என்று நினைப்பவர்கள்

❖ வந்தாரை வாழ வைக்கும் பூமி தமிழ்நாடு. இன்று கூட, பல்வேறு மொழி பேசும் நடிகர், நடிகையர், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், தமிழ்த் திரைப்படத் துறையில் முன்னணியில் இருக்கிறார்கள். தானும் வாழ வேண்டும், அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் தமிழ் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள்.

## வாழும் வகை இரண்டு

❖ இந்த உலகத்தில் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறவர்கள் உண்டு. தானும் வாழ வேண்டும், அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்று நினைக்கிறவர்களும் உண்டு.

## அடுத்தவரை அழிக்கும் அழுக்கு எண்ணம்

❖ எப்படியாவது தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறவர்கள், எப்போதும் அவர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறவர்களை மட்டும் அல்லாமல், தனக்குப் போட்டியாக இருப்பவர் எனக் கருதப்படுபவரையும் அழித்துவிட வேண்டும் என்று நினைப்பார்கள்.

## திரைப்படங்கள் எப்படி இருக்க வேண்டும் ?

❖ திரைப்படம் என்பது, பல்வேறு கலைஞர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் ஒரு கருவி என்றாலும், நல்ல கருத்துகளையும், முற்போக்குச் சிந்தனைகளையும், எண்ணங்களையும், இளைய சமுதாயத்தினரிடம் எடுத்துச் செல்லும் வகையிலும்; சாதி மற்றும் மத ரீதியிலான வகையில், பிறர் மனம் புண்படாமல் இருக்கும் வகையிலும்; வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளைத் தவிர்த்தும் படங்களை எடுக்க வேண்டும்.

## மாநில அரசுகளின் தலையாய கடமை

❖ சமுதாயத்தில் அமைதி மற்றும் பொது ஒழுங்கைப் பராமரித்தல் மற்றும் குடிமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே மாநில அரசுகளின் முதல் மற்றும் தலையாய கடமை.

## மக்களின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்குமே உயர் முன்னுரிமை

❖ மாநில மக்களின் விருப்பங்கள் மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு அவற்றிற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியது மாநில அரசுகளின் கடமை. அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும் அறிந்து, உள்ளாட்சி நிருவாகம் அமைய வேண்டியது அவசியம்.

## நவீன இந்தியா – பாரம்பரிய இந்தியா

❖ நிறம், மொழி, சாதி, இனம் மற்றும் கலாச்சார ரீதியில் பிரிந்து காணப்பட்டாலும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றுவதுடன், நமது தேசிய பெருமையை வலுப்படுத்தி, நவீன மற்றும் பாரம்பரிய இந்தியா, ஒரே நாடு என்னும் அடையாளத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

## சக்தி வாய்ந்த மக்கள் ஊடகம்

❖ கலாச்சாரம், கல்வி, பொழுதுபோக்கு, பிரச்சாரம் ஆகியவற்றுக்கான தவிர்க்கமுடியாத சாதனமாக சினிமா திகழ்கிறது. உலகில், சினிமா அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்து, சக்திவாய்ந்த மக்கள் ஊடகமாக அது திகழ்கிறது.

## போக்குவரத்து வாகனங்களின் அதி முக்கியம்

❖ மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், இன்றியமையாததாக விளங்குவது போக்குவரத்து வாகனங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

## நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனை

❖ இயற்கை நமக்குப் பல சக்திகளை வாரி வழங்கி இருந்தாலும், அவற்றில் மிகப் பெரிய அளவில் மக்களுக்குப் பயன்படுவதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு

இன்றியமையாததாகவும் விளங்குவது மின் சக்தி என்று சொன்னால் அது மிகையாகாது.

## இயற்கை வளங்களை முறைப்படி பயன்படுத்துவோம்

❖ ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இயற்கை வளங்களான கனிம வளம், நீர் வளம், நில வளம், எரிபொருள் வளம், வன வளம் ஆகியவற்றை முறைப்படி பயன்படுத்திக் கொள்வதைப் பொருத்து அமையும்.

## குழந்தைகளை புத்திசாலிகள் ஆக்கும் சதுரங்கம்

❖ சதுரங்க விளையாட்டு குழந்தைகளை புத்திசாலிகளாக உருவாக்குகிறது. இது ஒருமுகத்தன்மை, அமைதி, விடாமுயற்சி ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதுடன், ஆக்கத்திறன், மன எழுச்சி மற்றும் ஞாபகத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துகிறது.

## சதுரங்க விளையாட்டின் தனிச் சிறப்பம்சங்கள்

❖ நுட்பமான சிந்தனைகளையும், விரைவாகப் புரிந்து கொள்ளுதலையும், உடனடி வெளிப்படுத்தும் திறனையும், ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்வது சதுரங்க விளையாட்டின் சிறப்பு அம்சங்களாகும்.

## புதிய கண்டுபிடிப்புகளின் புகலிடம்

❖ பல்கலைக்கழகங்கள் என்பது புதிய கண்டுபிடிப்பு களின் புகலிடம். இங்கு புதிய சிந்தனைகள் தொழில் ரீதியான கண்டுபிடிப்புகளாக மாறி வணிக ரீதியாக

வெற்றிபெற்று அந்தப் பகுதி வளர்ச்சியடைய உதவுகிறது.

## அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு அடிப்படை

❖ பல்கலைக்கழகங்கள் ஒரு நாட்டின் சிறந்த திறமையை வளர்க்கும் மையமாகவும், அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் விளங்குகிறது.

## பல்கலைக்கழகங்களின் கடமை

❖ பல்கலைக்கழகங்களின் கட்டாயக் கடமையான கல்வி வழங்குதல், அதன் மூலம் சிறந்த சிந்தனையை மாணவர்களிடம் வளர்த்தல், மாணவர்களின் திறனை மேம்படுத்துதல், அவர்களை வல்லுநர்களாக்குதல் ஆகியவை இப்போதும் மாறவில்லை. அதேவேளையில், மாணவர்களை பண்பாட்டு அடையாளங்களாக உருவாக்கி, அவர்கள் பெற்ற பல்கலைக்கழகக் கல்வியை சமூகத்துக்குப் பயன்படுத்தவும், சமூகத்தின் அறிவுசார்ந்த நிலையை உயர்த்தவும், பல்கலைக்கழகங்கள் தவறக்கூடாது.

## கல்வியும் பண்பாடும்

❖ வெறும் கல்வி என்பது தேடலுக்கு மட்டும் விடையளிக்கும். ஆனால், பண்பாடு மனிதத்துவத்தை மேலும் வளர்த்தெடுக்கும்.

## சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த.....

❖ சட்டம் – ஒழுங்கை நிலைநிறுத்துவதும், மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமை ஆகும். மக்களின் முக்கியப் பிரச்சினைகளையும்,

அவர்களின் உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைக்கச் செய்கிறது.

## காவல்துறையின் விரிவான பணிகள்

❖ சட்டம்—ஒழுங்கு என்பது முக்கியமான விஷயம் என்ற போதிலும், இந்த அம்சம் காவல்துறையினரின் கடமைகளில் ஒரு பகுதிதான். குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முக்கியப்பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், முக்கியமான அமைப்புகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல், இயற்கைச் சீற்றங்களைச் சமாளித்தல், பல்வேறு சமூக சட்ட விதிகளைச் செயல்படுத்துதல் போன்ற விரிவான பணிகள் காவல்துறையினருக்கு இருக்கிறது.

## காவலர்களின் மூன்று முக்கிய பணிகள்

❖ காவலர், பெண் காவலர் ஆகியோருக்கு 3 முக்கியப் பணிகள் இருக்கின்றன. முதலாவதாக, சமூகத்தின் பாதுகாவலர் என்ற வகையில், பயங்கர குற்றவாளிகளிடமிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் அரணாக அவர்கள் விளங்க வேண்டும். இரண்டாவதாக, சட்டத்தின் அங்கம் என்ற வகையில், சமுதாயச் செயல்பாடுகளில் ஒழுங்கை ஏற்படுத்த காவலர்கள் சட்ட விதிகளை நடுநிலையோடு செயல்படுத்தும் நடுவராகவும்

செயலாற்ற வேண்டும். மூன்றாவதாக, ஒரு அரசு ஊழியர் என்ற முறையில் சட்டத்திற்கு அப்பாற்பட்டும் கூட காணாமல்போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பது, நடுவழியில் நின்றுபோன காரைத் தள்ளிவிடுவது போன்ற நட்பு முறையிலான பணிகளையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

## ஒரே சிந்தனை...
## பொதுமக்களுக்கு நன்மை செய்வதே

❖ பொதுமக்களுக்கு என்னென்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ, அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன்.

## பொது நலம் போற்றி முத்தமிடப்படும் சுயநலம் உதைபட்டு வதைபடும்

❖ பொதுநலம் என்பது புல்லாங்குழல் போன்றது. சுயநலம் என்பது கால்பந்து போன்றது. இவை இரண்டும் காற்றால் இயங்குகின்றன. புல்லாங்குழல் முத்தமிடப்படுகின்றது. கால்பந்து காலால் உதைக்கப்படுகின்றது. ஏன் ? தான் வாங்கிய காற்றை சுயமாக வைத்துக் கொள்வதால் கால் பந்து உதைபடுகிறது. தான் வாங்கிய காற்றை இசை வடிவில் மற்றவர்களுக்குக் கொடுப்பதால் புல்லாங்குழல் முத்தமிடப்படுகிறது.

## போற்றப்படும் பொது நலம் – புறக்கணிக்கப்படும் சுய நலம்

❖ சுயநலம் உள்ள மனிதர்கள் புறக்கணிக்கப் படுவார்கள். பொதுநலம் உள்ள மனிதர்கள் போற்றப்படுவார்கள்.

❖ என்னைப் பொறுத்தவரையில் ஒரே நலம் தான் இருக்கிறது. அது தமிழக மக்களின் நலம். அதனால் தான் என் அன்புக்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள். நானும் உங்கள் பக்கம் இருக்கிறேன்.

## இளைஞர்களுக்கு வேண்டிய சிந்தனையும் நோக்கமும்

❖ நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கமும், தொலைநோக்கு சிந்தனையும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் சவால்களைச் சந்தித்து, நம்முடைய மனஉறுதியையும், செயலாற்றலையும் மென்மேலும் வலிமைப்படுத்திக் கொள்ளலாம்.

## திறன் பெருக்கும் விளையாட்டுப் போட்டிகள்

❖ பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் விளையாட்டுத் திறன் போட்டிகள், பங்கேற்போரின்

வலிமையைப் பறைசாற்றுவதோடு, திறமையை மென்மேலும் பெருக்கி, வெற்றி பெற உதவுகின்றன.

## விளையாட்டுப் போட்டிகள் அமைத்துத் தரும் தளம்

❖ ஒழுக்க நெறிகள், நம்பிக்கை, தலைமைப் பண்பு, பரஸ்பர ஒத்துழைப்பு, அனைவரையும் மதித்தல் உள்ளிட்ட அம்சங்களை வலிமைப்படுத்தவும், பல்வேறு திறன்களை மேம்படுத்தவும், விளையாட்டுத் திறன் போட்டிகள் தளம் அமைத்துத் தருகின்றன.

## விளையாட்டுப் போட்டிகள் கற்றுத்தரும் பாடம்

❖ முயற்சியின் மதிப்பை வெளிப்படுத்துவதோடு, வெற்றியையும், தோல்வியையும் எதிர் கொள்வது எப்படி என்பதையும் விளையாட்டுத் திறன் போட்டிகள் கற்றுத் தருகின்றன.

## விளையாட்டுப் போட்டிகள் வெளிப்படுத்தும் நற்குணங்கள்

❖ ஒட்டுமொத்த வளர்ச்சி, அமைதி, சமாதானம், பரஸ்பர ஒத்துழைப்பு, எதிர் அணியில் இருப்போரையும் மதித்து நடந்து கொள்வது ஆகிய பல்வேறு அம்சங்கள் விளையாட்டுப் போட்டிகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

## விளையாட்டுப் போட்டிகள் கற்பிக்கும் வாழ்க்கைத் திறன்கள்

❖ விளையாட்டுத்திறன் போட்டிகள் மூலமாகக் கற்றுக் கொள்ளப்படும் வாழ்க்கைத் திறன்கள், தனிப்பட்ட நபர்களின் நல்ல குணங்களை வளர்த்துக் கொள்வதற்கும், ஆளுமைத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்கும், மற்றவர்கள் உடனான உறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் உதவுகின்றன.

## பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்க வேண்டும் காவல்துறை

❖ காவல் துறையினர்தான் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய மிக அத்தியாவசியமான சேவையில் அதிக அளவில் ஈடுபடுபவர்கள், அனைவருக்கும் வெளிப் படையாக தெரியக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, கமாண்டோப் படையினரின் எதிர்தாக்குதல் திறன்களின் மேம்பாடு என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை ஈடுகொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

## அதீத உறுதியும் தனித்திறனும் கொண்ட சேவை

❖ கமாண்டோ படை வீரர்களே! உங்களுடைய சேவை என்பது, அதீத உறுதியுடன் எல்லா நேரங்களிலும்,

தனித் திறமையுடன் விளங்குவதாகும். நீங்கள், உங்கள் பணியை நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் மற்றவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் உயர்த்திக் கொள்வதன் மூலம், பொதுமக்களின் உயர்ந்த நம்பிக்கையையும், அவர்களின் மரியாதையைப் பெறுபவர்களாகவும் இருப்பீர்கள்.

## சவால்களே சிறந்த அதிகாரிகளை வடித்தெடுக்கும்

❖ எப்படி நெருப்பு உலோகத்தைச் சுத்தப்படுத்துகிறதோ, அதேபோல சவால்கள்தான் உங்களை மிகச் சிறந்த அதிகாரிகளாக வடித்தெடுக்கும்.

## மக்களுக்கு நன்மை என்பதே ஒரே நோக்கு

❖ மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் திட்டங்களை தீட்டுகிறோம். அவ்வாறு தீட்டப்பட்ட திட்டங்கள் மக்களை சென்றடைகின்றன. திட்டங்களிலே ஒரு சில குறைகள் இருக்கலாம். திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலே சில இடங்களில் சில குறைகள் இருக்கலாம். அவற்றைச் சுட்டிக்காட்டினால், அவற்றை சரிசெய்ய நாங்கள் தயங்க மாட்டோம். அதற்காக ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

## நல்லதும் கெட்டதும்
## அவரவர் மனம் பொறுத்ததே!

❖ எந்த திட்டம் ஆனாலும் எந்த செயல் ஆனாலும் நல்லதைக் காண்பதென்றாலும் காணலாம். கெட்டதைக் காண்பதென்றாலும் காணலாம். நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது தான் ஒவ்வொரு செயலிலும் நல்லதும் கெட்டதும். அவரவர்களுடைய மனதைப் பொறுத்து நல்லதும் கெட்டதும் தெரியும்.

## அரசியல் காழ்ப்புணர்ச்சியாளர்கள்
## மக்களின் எதிரிகள்

❖ மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டு வரும் எனது தலைமையிலான அரசின் மீது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புழுதிவாரி இறைக்கின்றவர்கள் பக்கம் மக்கள் இல்லை. அவர்களும் மக்கள் பக்கம் இல்லை.

## எங்கள் பக்கம் மக்கள் –
## மக்கள் பக்கம் நாங்கள்

❖ மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துகின்ற எங்கள் பக்கம் மக்கள் இருக்கிறார்கள். மக்களின் பக்கம் நாங்கள் இருக்கிறோம்.

## தமிழ்நாட்டின் திறன் மிகு மனிதவளம்

❖ தமிழ்நாட்டில் தகுதிவாய்ந்த, திறன்மிக்க மனிதவளம் ஏராளமாக உள்ள நிலையில், அறிவுசார் பொருளாதார சக்தியாக தமிழகம் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் சாதகமாக அமைந்துள்ளன.

## பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதல்

❖ வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதே, பொருளாதார வளர்ச்சித் தூண்டலை உறுதி செய்யும்.

**“தமிழகமே எனது குடும்பம்.**
**தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்.**
**தமிழக மக்களின் நலனே என் நலன்.”**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்